காலக்ஷேப பாகவதர்களின் சரித்திரம்

எழுதியவர் :
ஸ்ரீ துரையப்ப பாகவதர்

பதிப்பாசிரியர் :
ரஞ்சன்

நாட்டியம்

சதங்கை 1] [மணி 7

காலக்ஷேபம்

"காலக்ஷேபம்" என்ற சொல் பொதுவாய்ப் பொழுது போக்கு என்பதைக் குறிக்கும். மதிப்பிலடங்காத காலத்தை எவரும் வீணாக்கக்கூடாது என்பதற்காகவே ஒவ்வொருவரும் ஒரு தொழிலில் ஈடுபட்டிருக்கிறோம்; அன்றாடம் அவரவர்கள் செய்யும் தொழிலில் ஏற்படக் கூடிய சிரமத்திற்குப் பரிகாரமாகவும், மனதுக்கு விச்ராந்தி உண்டாகவும் எல்லோருக்கும் பொதுவான ஒரு பொழுது போக்கு அவசியம் என்பதை எண்ணியே "கதா காலக்ஷேபம்" என்ற உத்தமமான மார்க்கத்தை நம் முன்னோர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

நமது ஹிந்து மதம் வெகு புராதனமானது. நம்முடைய வேத காலத்திய நாகரிகங்கள் இணையற்றவை. அவைகளைக் கற்றோரும், மற்றோரும் எளிதில் அறியும் வண்ணம் எழுதப்பட்டிருக்கும் புராணங்கள் கணக்கற்றவை. உன்னதமான லட்சியங்களைக் கதைகளின் மூலமாகவே எல்லோரும் அறியும் வண்ணம் வால்மீகி, வ்யாசர், கம்பன் ஆகியோர் எழுதினார்கள். இவர்களின் அபிப்ராயங்களை விளக்கமாய் எடுத்துரைத்து மக்களின் மனதில் இந்த உன்னத எண்ணங்கள் வேரூன்றித் தழைக்கும்படிப் பிரசாரம் செய்ய ஒரு வகுப்பார் முன்வந்தனர். இவர்களே 'பௌராணிகர்கள்'. புராண புருஷர்களாகிய ஹரிச்சந்திரன், ராமன், பரதன், ஹநுமான், அர்ஜுன[illegible], பீஷ்மன் ஆகியோர் செய்திருக்கும் மகத்தான தியாகங்களையும், சந்திரமதி, சீதை, திரௌபதி போன்ற ஸ்திரீ ரத்தினங்களின் பொறுமையையும் எல்லோரும் அறியும் வண்ணம் சங்கீதத்தையும் கலந்து, கதைகள் மூலம் சொல்லி மக்களின் பண்பாட்டை உயர்த்தியவர்கள் பௌராணிகர்களும் பாகவதர்களுமாவார்கள்.

பொதுவாக மனிதன் ஸ்வபாவம், "ஒருவன் புத்தி சொல்லுவது; நாம் அதைக் கேட்பதா?" என்ற வழியில் தான் செல்லும். ஆனால் புத்திமதிகளைப் பட்டவர்த்தனமாய்ச் சொல்லாமல் மறைமுகமாய்க் கதைகள் மூலம் சங்கீதத்தையும் கலந்து இதோபதேசமாகச் செய்தால் யார் தான் மறுப்பார்கள்?

கசப்பான மருந்தாயிருந்தாலும் தேன், சர்க்கரை இவைகளுடன் கலந்து குழந்தைகளுக்குக் கொடுப்பது போல் இதோபதேசங்களைப் புகட்டுவதற்குக் கதாகாலக்ஷேபந்தான் ஏற்றமார்க்கம் என்பதை நம் முன்னோர்கள் நிச்சயித்தார்கள். ஞானமார்க்கம், கர்ம மார்க்கம் இவைகளின் மூலம் பகவானை யடையலாமானாலும், இந்த இரண்டிற்கும் பொதுவாயுள்ள பக்தி மார்க்கம் சுலபமானது என்பதையறிந்த மகான்கள் இதையே பிரசாரம் செய்தார்கள்.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் இருந்த ஜய தேவர் என்ற மகான் ஜீவாத்ம பரமாத்ம ஐக்கியத்தை ராதை, கிருஷ்ணன் இவர்களுடைய கதையால், பகவான் பக்திக்குக் கட்டுப்பட்டார் என்பதை நிரூபித்து "கீத கோவிந்தம்' என்ற காவியத்தை எழுதினார்.

இதில் உள்ள அஷ்டபதிகள் நாளது வரை யாவராலும் மெய்மறந்து பாடப்பட்டு வருகின்றன. பிற்காலத்தில் நாராயண தீர்த்தர் என்ற பெரியார் "கிருஷ்ணலீலா தரங்கிணீ" என்ற கிரந்தத்தை யெழுதி யருளினர். மகா ராஷ்ட்ர தேசத்திலிருந்து மகான்களாகிய ஏகநாதர், துகாராம், ஸமர்த்த, ராமதாஸர், நாமதேவர், வாமன பண்டிதர் ஆகியோர் அபங்கம், ஸாகி, தண்டி, ஓவி போன்ற சுலபமான நடைகளில் அநேக கிரந்தங்களை எழுதி யருளினார்கள். குவாலியர், புனா ஆகிய இடங்களில் அநேக பாவர்க்கள்ஸங்கீதக் கலையிலும், சுருதி ஸ்மிருதி இதிஹாச புராணங்களிலும் நல்ல தேர்ச்சி யடைந்திருந்த படியால் தம்புரா, மிருதங்கம், தபேலா, கோல், ஜாலர், சிப்ளா முதலிய வாத்தியங்களையும் அமைத்துக் கொண்டு காலில் கஜ்ஜையைக் கட்டிக் கொண்டு ஆடிப் பாடிக் கதைகளை ஜனங்களுக்குப் புகட்டினார்கள்.

தென்னிந்தியாவில் கதைகளின் மூலம் மக்களின் பண்பாட்டை உயர்த்தியவர்கள், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நாயன்மார்களின் தேவாரம், திருவாசகம், திருக்குறள், அருட்பா, நல்வழி ஆகிய நூல்களிலிருந்து அரிய மேற்கோள்களை எடுத்துரைத்துக் கம்ப ராமாயணம், கந்த புராணம், வில்லிப் புத்தூரார் பாரதம் ஆகியவற்றைப் பிரசங்கம் செய்த ஓதுவார்களும், வால்மீகி ராமாயணம், பாகவதம், பாரதம் முதலிய இதிகாச புராணங்களையும் ஸங்கீதத்துடன் கலந்து சுருதி, ஸம்ருதி மேற்கோள்களாய்ச் சொல்லி, பிரசங்கம் செய்த பௌராணிகர்களும், மேற்கண்ட இரண்டு முறைகளையும், தழுவி அநேக இசைக் கருவிகளையும், சில பாடகர்களையும் உதவியாக அமைத்துக் கொண்டு காலக்ஷேபம் செய்த பாகவதர்களுமாவார்கள்.

சென்ற நூற்றாண்டின் மத்திய காலத்தில் இருந்த காப்பண மங்கலம் சாமி சாஸ்திரிகள் என்பவர் நல்ல சாரீரத்துடனும் அநேக ராக ஆலாபனங்களுடனும் புராணம் சொல்ல ஆரம்பித்தார். இம்மாதிரியே மார்க்க ஸகாய சாஸ்திரிகள் திவ்யமான ஸங்கீதத்துடன் புராணம் சொல்லி வந்தார். பருத்தியூர் கிருஷ்ண சாஸ்திரிகள் என்பவர் அநேக வர்ணனைகளுடன் அடுக்குச் சொற்களையும் பிராஸ வசனங்களையும் நிரப்பிக் கேட்போரைக் 'கவர்ந்தார். இம்மாதிரி இன்னும் அநேக பௌராணிகர்கள் இருந்தார்கள். பாகவதர்

களில் பிரஸித்தர்களாய் விளங்கிய வரகூர் கோபால பாகவதர், பூவனூர் கல்யாண ராம பாகவதர், மருதா நல்லூர் ஸ்வாமிகள் ஆகியோர் ஜயதேவருடைய அஷ்டபதிகளையும், மகாராஷ்ட்ர அபங்கங்களையும் தரங்கம், முதலிய கீர்த்தனைகளையும் இடை இடையே பாடி பக்திரஸமான கதைகளைச் செய்து வந்தார்கள். இவர்கள் கிராமங்களிலும் பட்டணங்களிலும் உஞ்சவிருத்தி செய்து கொண்டும், கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைந்தும், பகவத் பஜனைகளையும், பகவத் குணங்களையும் சொல்லி வந்தார்கள். பெரியோர்கள் எல்லோரும் பக்தி ரஸத்தில் உருகிக் கேட்டுப் பூஜித்தார்கள்.

ஆனல் இவர்களின் கதைகளில் தர்ம மோக்ஷங்களைத் தவிர உலக வாழ்க்கையைப் பற்றிய சங்கதிகள் இல்லாததால் அர்த்த, காமங்களைத் தேடும் ஸாதாரண ஜனங்கள், வியாபாரிகள், ஆங்கிலக் கல்வியில் ஈடுபட்டிருந்த சிறுவர்கள் ஆகியோருக்கும் ரஸமுண்டாகவில்லை. கதை கேட்பது விரக்தர்களுக்கும், துக்கப்பட்டவர்களுக்கும், வயதானவர்களுக்குந்தான் உசிதம் என்று எண்ணினர்கள். பொதுவாய்க் கதைகளைக் கோவில், மடம் சத்திரம், தெருத் திண்ணை போன்ற இடங்களில் வைத்துக் கேட்டார்கள். 'தேகம் அநித்யம்; வாழ்வு சதமில்லை; ஸம்சார பந்தங்களைக் களையவேண்டும்' என்ற ஹிதோபதேசங்களை அவ்வளவு மங்களகரமாய்க் கருதாததனல் வீடுகளிலும், விவாகம் போன்ற கல்யாண காலங்களிலும் கதைகளை வைத்துக் கேட்பதில்லை. ஆகவே, ஆங்கிலக் கல்வியும் கலாசாரங்களும் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பரவ ஆரம்பித்ததால், ஜனங்களிடையே பக்தியும் சிரத்தையும் வரவரக் குறைவுபட்டன.

இதே சமயத்தில் மகாராஷ்டிர ராஜ்யம் தஞ்சையில் நகாரிகமாக அமைக்கப்பட்டு ஸங்கீதம், கதை முதலிய கலைகளுக்குப் பேராதரவு இருந்தபடியால், முன் சொன்னபடி மகராஷ்டிர தேசத்திலிருந்து அநேக கோஸ்ஸ்வாமிகள், மேருஸ்வாமிகள், மோர்கார் பாவா முதலானவர்கள் அவர்களுடைய பந்தாவில் கதை செய்து தஞ்சை, புதுக்கோட்டை, திருவனந்தபுரம் ஆகிய சமஸ்தானங்களிலும், மற்றும் பல்லாரி, பங்களூர், வேலூர், ஆரணி, செஞ்சி முதலிய இடங்களிலும் உள்ள ஜனங்களைப் பெரிதும் கவர்ந்தார்கள். ஆகவே வட நாட்டு முறையும், தென்னட்டு முறையும் ஒன்ருேடொன்று மோத ஆரம்பித்தன. மகாராஷ்டிரக் கதைகளின் அமைப்பு சுருக்கமாயும், வர்ணமெட்டுகள் கவர்ச்சியாயும் இருந்ததுடன், நவரஸங்களுக்கும் அதில் பரிபூர்ணமான இடமிருந்தபடியால், பக்திரஸம் ஒன்றையே பிரதானமாய்க் கொண்ட தென்னட்டுக் காலக்ஷேபங்களில் ஏற்கனவே அலுப்புத் தட்டியிருந்தமகாஜனங்களின் ஊக்கம் அதில் ஈடுப்பட்டது. இந்தக் காலத்தில்தான், அதாவது 1841-ல் தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதர் என்ற மகா புருஷன் அவதரித்தார். மகாமேதாவியான அவர், மேற்சொன்ன இரண்டு வகையான காலக்ஷேபங்களையும் பாலியத்திலேயே கேட்டுத் தனது ஒப்பற்ற புத்தியினலும், தனக்கு ஏற்பட்டிருந்த வசதிகளினலும் வடநாட்டு, தென்னட்டு சம்பிரதாயங்களையும் உசிதப்படி கலந்து நூதனமானமூன்ருவது மார்க்கத்தைச் சிருஷ்டித்து, தென்னட்டுக் கதா காலக்ஷேபங்களுக்கு மார்க்கதரிசியாய் விளங்கினர். தனக்கு முன்னுமில்லை, பின்னுமில்லை என்று கீர்த்தியை நிலைநாட்டினர். காலக்ஷேபக் கலையில் ஒரு புரட்சி ஏற்பட்டது. தென்னட்டுக் காலக்ஷேபம் தன்னிகரில்லா நூதனமான சோபையுடன் விளங்க ஆரம்பித்தது. ●

தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதர்

★

பிறப்பும், பாலியப் பருவமும்:—ஸங்கீத உலகிற்கென்று சில அவதார புருஷர்கள், பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றினார்கள். அவர்களில் தென்னாட்டுக் காலக்ஷேபக் கலைக்கு ஒரு மார்க்கதரிசியாய், அந்தக் கலையில் இணையற்ற புகழுடன் விளங்கிய தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதரவர்கள் 1851-ம் ஆண்டில் ஓர் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தார். இவருடைய இளமையிலேயே தகப்பனார் வெங்கடேச சாஸ்திரியார் என்பவர் காலமாகிவிட்டபடியால், சுமார் 14 வயதிருக்கும்போது தன் தாயாருடன் தஞ்சைக்கு வந்து சேர்ந்தார்.

நல்ல தேஜஸ்ஸும், செந்தாமரையின் நிறத்தை யொத்த மேனியின் அழகும், இயற்கையிலேயே இனிமையான சாரீரமும் வாய்ந்த இவருக்குக் கதைகள், பஜனைகள் என்றால் மிகவும் பிரியம். "விளையும் பயிர் முளையில் தெரியும்" என்றபடி, விளையாட்டுகளில் புத்தியைச் செலுத்தாமல், எந்த இடத்தில் கதைகள், கச்சேரிகள், பஜனைகள் நடந்த போதிலும் அங்கே போய்விடுவார்.

பாகவதரை முன்னுக்குக் கொண்டு வந்த பெரியண்ணா அவர்களின் வரலாறு:—பாலியத்தில் இவரை ஆதரித்து முன்னுக்குக் கொண்டு வந்த பெரியண்ணா அவர்களைப் பற்றிச் சில விவரங்களை இங்குச் சொல்ல வேண்டிய தவசியம். இந்தப் பெரியண்ணா என்பவர் தஞ்சை சமஸ்தானத்தில் மந்திரிப் பதவியை வகித்து, அந்தக் காலத்தில் சமஸ்தானம் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்பட்டுவிட்டதால், ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார். நல்ல பக்திமான்; அத்துடன் நல்ல அறிவாளி. தமிழில் அநேக ஸாஹித்யங்களைச் செய்திருக்கிறார். பிரதி வருஷமும் "கோகுலாஷ்டமி" "ராதா கல்யாணம்" ஆகிய உத்ஸவங்களை வெகு சிறப்பாக நடத்துவார். இதற்கென்றே அநேக பாகவதர்களும், தஞ்சை ஆஸ்தான வித்துவான்களாயிருந்த சிலரும் வருவார்கள். கோகுலாஷ்டமி உத்ஸவம் பத்துத் தினங்கள் நடைபெறும். பிரதி தினமும் காலையில் திவ்யநாம ஸங்கீர்த்தனபஜனைகளும், கிருஷ்ணபகவானுடையராஸக்ரீடையைப்போன்ற கும்மி கோலாட்டம் ஆகிய வைபவங்களும் நடைபெறும்.

சில பாகவதர்கள் க்ஷேத்ரக்ஞர் பதங்களையும், பெரியண்ணா அவர்களின் சில தமிழ்ப் பதங்களையும் பரத சாஸ்திரப்படி அபிநயம் பிடித்து ஆடிப் பாடுவார்கள். பகலில் பாகவதர்களுக்கு ஸந்தர்ப்பணமும், மாலையில் ஸத்கதா காலக்ஷேபங்களும் நடைபெறும். கடைசி நாள் ருக்மிணி கல்யாணம். பிறகு விடாயாற்றியுடன் உத்ஸவம் பூர்த்தியாகும். மார்கழி மாதத்தில் ஸம்ப்ரதாயப்படி ஒவ்வொருநாள் விடியற்காலத்திலும் பஜனை செய்து, ஒரு அஷ்டபதிகம் பாடி மாத முடிவில் ராதா கல்யாண மஹோத்ஸவமும் நடத்துவர். இதிலும் கோலாட்டம் கும்மி போன்ற அநேக ரஸமான வைபவங்கள் உண்டு.

முதன் முதலில் கிருஷ்ணபாகவதரவர்கள் இந்த உத்ஸவங்களில் காலந் தவறாமல் பிரதி தினமும் போய்ப் பஜனைகளில் பங்கெடுத்துக் கொண்டார். இவருடைய இனிமையான சாரீரம், தேஜஸ், அடக்க ஒடுக்கமான ஸ்வபாவம்—இவைகளினால் அங்குள்ளவர்களின் கவனத்தைப் பெரிதுங் கவர்ந்தார். பெரியண்ணா அவர்களுக்குத் தன்னையும் மீறிய ஒரு வாத்ஸல்யம் இவரிடம் ஏற்பட்டது. இந்தப்பையனை நம்மாலான வரையில் முன்னுக்குக் கொண்டுவரவேண்டும் என்று தீர்மானித்தார். பையனுடைய ஏழ்மையான நிலைமையும், ஸங்கீதத்தில் அவனுக்கிருந்த ஆர்வமும், சுறுசுறுப்பும், பெரியண்ணா அவர்களின் தீர்மானத்தை வெகு சீக்கிரத்தில் அனுஷ்டானத்தில் கொண்டுவரக் காரணமாய் இருந்தன. அது முதல் பையனைத் தன்னுடைய பாதுகாப்பில் வைத்துக்கொண்டார். குடும்ப ஸம்ரக்ஷணைகளுக்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்தார். தன்னுடைய உத்ஸவங்களை ஸம்ப்ரதாயப்படிக்கும், பஜனைகளைப் பத்திகளின் படிக்கும் தான் நினைத்திருக்கிறபடி தனக்குப் பிற்காலத்திலும் நடத்த, இந்தப்பையனைத் தகுந்த யோக்கியதையுள்ளவனாக வெகு சீக்கிரத்தில் செய்ததோடு, காலக்ஷேபக் கலையிலும் வேண்டிய பயிற்சிகளை யளிக்க ஏற்பாடு செய்தார்.

பெரியண்ணா அவர்களின் ஆதரவில்பாகவதரவர்கள் தயாரான விவரம்:—அந்தக் காலத்தில் கியாதியுடன் விளங்கிய வரகூர் கோபால பாகவதர், பூவனூர் கல்யாணராம பாகவதர், அண்டமின் சிவராம பாகவதர், காருகுடி வேம்பு பாகவதர் ஆகியோர்களின் கதைகளில் பக்திரஸம் மட்டும் விசேஷமாயிருந்தது. ஸம்ஸ்கிருதம் தமிழ் ஆகிய இரண்டு பாஷைகளைத் தவிர இதரபாஷைகளில் உள்ள ஸாஹித்யங்களுக்கும் ஸங்கீதத்திற்கும், அந்தக் கதைகளில் அதிக இடம் இல்லாததால், அவைகள் எல்லா ஜனங்களையும் ஆகர்ஷிக்கவில்லை யென்பதையும், அதேகாலத்தில் தஞ்சாவூரில் வந்து கதைகளைச் செய்த வட தேசத்து பாவாக்களின் கதைகளில் பொது ஜனங்களின் ஆதரவு மிகுந்திருப்பதையும் கவனித்தார் அறிவாளியான பெரியண்ணா.

ஆகவே, அந்தக்காலத்தில் "ஸங்கீத ப்ரஷ்டோ பாகவத ச்ரேஷ்ட:" என்று வேடிக்கையாய் வழங்கி வந்த பழமொழியைப் பொய்யாக்கி, தனது கல்பனைப்படி உருவாகும் பாகவத புருஷன் முதலில் சங்கீதத்தில் நல்ல பாண்டித்யம் பெற்றவனா யிருக்கவேண்டும் என்று எண்ணினார். கேவலம் ஒன்றிரண்டு பாஷைகளில் மட்டுமின்றி ஸம்ஸ்கிருதம், தெலுங்கு, தமிழ், கன்னடம், மஹாராஷ்ட்ரம், ஹிந்தி, ஹிந்துஸ்தானி ஆகிய எல்லாப் பாஷைகளிலும் போதிய தேர்ச்சியடைந்திருப்பதுடன், அந்தந்தப் பாஷைகளில் உள்ள ஸாஹித்யங்களை அந்தந்தத் தேச ஸம்ப்ரதாயப்படிப் பாடக்கூடிய சக்திவாய்ந்தவனாயு மிருக்கவேண்டும் என்று நினைத்தார். கதைகளில் ப்ரவசனம் செய்கையில், அஸப்யமான வார்த்தைகளன்னியில் பக்திரஸத்தைப் போலவே நவரஸங்களும் சோபிக்கும்படி அந்தந்தப் பாத்திரமாயிருந்து ஸ்வானுபவத்துடன் நடித்துப்பேச, பரத சாஸ்திரத்திலும் நல்ல பாண்டித்யம் இருக்க வேண்டும் என்று தீர்மானித்தார். இவைகள் எல்லாவற்றிற்கும் அடிப்படையாய், நல்ல சரீரம், தேஜஸ், சாரீரம், உயர்ந்த ஒழுக்கங்கள், கூர்மை

யான புத்தி இவைகள் அமைந்த ஒரு பாகவத புருஷன் தேவை என்று தான் வெகுநாட்களாகக் கல்பனைசெய்துவந்த பாத்ரத்தை இப்போது கண்டுபிடித்து விட்டதாகவே எண்ணினர். ஆகவே கிருஷ்ண பாகவதரவர்களை முன்னுக்குக் கொண்டுவரும் பணியில் தீவிரமாய் ஈடுபட்டார். ஸங்கீதத்திற்கு ஓர் உபாத்யாயரையும், ஸம்ஸ்கிருதம, தமிழ், தெலுங்கு, மஹாராஷ்ட்ரம், கன்னடம், ஹிந்துஸ்தானி ஆகிய எல்லாப் பாஷைகளிலும் வேண்டிய பயிற்சியை யளிக்க வெவ்வேறு பண்டிதர்களையும் ஏற்பாடு செய்தார்.

திருப்பூந்துருத்தியில், திருமலை ஐயரிடம் ஸங்கீதம் அப்யஸித்தவரும் தஞ்சை ஆஸ்தான வித்துவானுயிருந்தவரும், பரத சாஸ்திரத்தில் நல்ல பாண்டித்யம் பெற்றவரும்—எனது பிதாமகருமாகிய அபிநயம் அப்பாத் துரை அய்யர் என்பவர் பெரியண்ணுவுக்கு ஆப்த நண்பராயிருந்தபடியால் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்கி, நாட்டியக் கலையைக் கிருஷ்ண பாகவதரவர்களுக்குச் சொல்லி வைக்கும் பணியில் பூர்ண சிரத்தையுடன் ஈடுபட்டார். இவைகள் எல்லாவற்றிற்கும் தேகக்கட்டு அவசியம் என்பதை யுணர்ந்த பெரியண்ணு அவர்கள் பிரதி தினமும் தண்டால், பஸ்கி போன்ற தேகாப்பியாஸங்களைச் செய்விக்க ஒரு வஸ்தாதையும் நியமித்தார்.

இப்படியாக எல்லாத் துறைகளிலும் தகுந்த பயிற்சியை யளித்த அந்த அறிவாளியின் தீர்க்கதரிசனம் வீண் போகவில்லை. தான் உருவாக்கி வரும் பாகவத புருஷன், அந்தந்தத் துறையில் ஏகஸந்தக்ராஹியாய் இருப்பதையும் அவனுக்குச் சொல்லிக் கொடுக்கும் விஷயத்தில் உபாத்தியாயர்கள் எல்லோரும் பரம உத்ஸாகத்தோடு இருந்து வருவதையும் அறிந்தார்.

அந்தக் காலத்தில் வட தேசத்திலிருந்து தஞ்சை சமஸ்தானத்திற்கு வந்து கதை செய்யும் அநேக பாவாக்களின் கதைகளையும் பாகவதர் விடாமல் கேட்பார். முக்கியமாய் மகா மேதாவியான மோர்காம் ராமச்சந்திர பாவா அவர்கள், தஞ்சையில் அடிக்கடிக் கதை செய்ததோடு வடக்கு ராஜ வீதியில் ஒரு மடத்தையும் ஸ்தாபித்து விட்டபடியால், அங்கு நடக்கும் கதைகளுக்குச் சில சமயம் பிடிலும் வாசிப்பர். இதனல் வட நாட்டுக் காலக்ஷேபங்களில் உள்ள ஸாரமான பாகங்களைத் தென்னாட்டுக் காலக்ஷேபங்களில் அமைத்து, வேண்டிய சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் என்று பாகவதர் எண்ணினர்.

இப்படியாகத் தன்னுடைய ஆதரவில் சுமார் ஆறு வருஷகாலம் பயிற்சி பெற்ற பாகவதரவர்கள் எல்லா அம்சங்களிலும் பூர்ணமான பிரகாசத்தோடு விளங்குவதை யறிந்த பெரியண்ணு அவர்கள் தான் நடத்திவரும் 'ராதா கல்யாண' உத்ஸவத்தில் இவரை அரங்கேற்ற எண்ணினர்.

கிருஷ்ணபாகவதரவர்களின் முதல்காலக்ஷேபம்:— முதன் முதலாக, தான் தயார் செய்து வைத்திருந்த "ராதா கல்யாணம்" என்ற நிரூபணத்தை இவருக்குப் பாடம் செய்வித்து, போதிய ஒத்திகைகளும் நடத்திய பிறகு, ராதா கல்யாண உத்ஸவத்தன்று இவருடைய கதையை ஏற்பாடு செய்தார். தஞ்சையில் உள்ள ராஜவம்சப் பிரபுக்களும், தனவந்தர்களும், பெரிய உத்தியோகஸ்தர்களும் நிறைந்த ஸபையைக் கூட்டினர். எல்லா வித்துவான்களையும் வரவழைத்தார். மாலை 5 மணிக்குக் கதை ஆரம்பம். 20 வயதுள்ள யுவராய், நல்ல முறுக்குடனும் திவ்ய தேஜஸ்ஸுடனும், பாகவத ஸம்ப்ரதாயப்படி கோபீச்சந்தண த்வாதச நாமங்களும் துளஸிமணிமாலை ருத்ராக்ஷம் இவைகளும் விளங்க பஞ்சகச்சம், யோக வேஷ்டி இவைகளுடன் சோபிக்கும் பாகவத புருஷனை ஸபையில் கொண்டுவந்து நிறுத்தினர்.

காலில் கஜ்ஜையைக் கட்டிக் கொண்டு கதையை ஆரம்பிக்க அவர் எழுந்தவுடன் ஸபையில் நிசப்தம் நிலவியது. தம்புராவின் நாதம் ஸபை பூராவும் சூழ்ந்தது. முதல் கதையாயிருந்தும் கொஞ்சமேனும் ஸபாகம்பம இல்லாமல் மஹாராஷ்ட்ர கதைகளின் பந்தாப்படி முதலில் 'பரூபதியை' ஆரம்

பித்தார். "ஜல் ! ஜல் !" என்று ஜாலரை ஒரு ஆவர்த்தம் தட்டி "ஸ்ரீ ராம்' என்றாரம்பித்து முதலில் ஸம்ஸ்கிருதத்திலும் பிறகு மஹாராஷ்ட்ர ஸம்ப்ர தாயப்படிக்கும் பாடி, பஞ்சபதியை முடித்தவுடன் வழக்கம்போல் பாகவ தருக்கும் ஜமாவில் உள்ள மற்றவர்களுக்கும் பெரியண்ணா அவர்களே சந்தனம், புஷ்பம், திலகம் இவைகளை வழங்கினார். பிறகு ப்ரதமபதம்பாடி முறைப்படி கதை ஆரம்பிக்கப்பட்ட வுடனேயே, பாகவதரவர்களின் சாரீர வன்மையையும், ஸங்கீதத்தின் மேன்மையையும், ப்ரவசனங்களின் பாணியை யும், கண்ட சபையோர்கள் நூதனமான முறையில் தங்களுக்கு ஒரு கால க்ஷேப விருந்து ஆரம்பமாயிருப்பதை அறிந்து, கண் கொட்டாமல் கதையைக் கவனித்தார்கள். பூர்வாங்க நிரூபணத்தில், பாகவதரவர்கள் பூர்வி கல்யாணி ராகத்தில் ஒரு சுலோகம் சொல்லி முடித்து ஒரே நிமிஷம் அவர் செய்த ஆலாபனையில், அந்த ராகத்தின் ஸ்வரூபம் பூரண களையுடன் விளங்குவதைக் கண்ட ஸங்கீத வித்துவான்களும் ரஸிகர்களும் மலைத்தே போனார்கள். அதற் குப் பாகவதரவர்கள் சுருக்கமாயும் தெளிவாயும் அர்த்தம் சொன்னதைக் கேட்ட பண்டிதர்கள், சிரக்கம்பம் செய்தார்கள். இப்படியாகத் தெலுங்கு தமிழ், மஹாராஷ்ட்ரம், கன்னடம் ஆகிய பாஷைகளில் ஒவ்வொரு உருப்படி யும் நவ நவமாய்ப் பாடப்படுவதையும், அதற்கேற்ற பாவங்களுடன் ப்ரவச னம் செய்யப்படுவதையும் கண்ட சபையோர்கள் மெய்ம்மறந்தார்கள். மத்தி யில் ஓர் உருப்படிக்குச் சொற் கட்டுகளுடன் ஆடிக்கொண்டே பாடுகையில் தான் பாகவதரவர்கள் கஜ்ஜையுடன் நின்ற மர்மத்தை யாவருமறிந்தார் கள். பூர்வ பீடிகை முடிந்தவுடன் ஹிந்துஸ்தானியில் ஒரு துருபத் பாடினார். இப்படியாக ஒவ்வொரு அம்சமும் விசேஷசக்தியுடன் விளங்குவதைப் போல், எடுத்துக்கொண்ட 'ராதா கல்யாணம்' என்ற கதையும் அபூர்வமாயும் அழகாயும் இருப்பதைக் கண்டு மகிழ்ந்தார்கள். ராதையானவள் கிருஷ்ணனை எண்ணி விரக தாபத்தையடையும் வர்ணனைகளைச் சொல்லி வருகையில் "நடந்தானே மாரன்" என்ற பெரியண்ணா அவர்களின் ஸாஹித்யத்தைக் 'கமாஸ்' ராகத்தில் பாடி, பரத சாஸ்திரப்படி பாவங்களைப் பிடித்து ஆடிக் காட்டுகையில் ஸபையில் உள்ள எல்லோரும் தாங்கள் அநங்கனாகிய மன் மதனைப் பிரத்யக்ஷமாய் சரீரத்துடன் பார்ப்பதாய் எண்ணி மயங்கினார்கள்.

ஒத்திகைகளில் இந்த பாவஸ்பூர்த்தியுள்ள உருப்படியை எத்தனையோ முறைகள் கேட்டும் பார்த்துமிருந்த பெரியண்ணா அவர்கள் கூட, தன்னையும் மீறிய ஸந்தோஷத்தினால் "ஸபாஷ் கிருஷ்ணையா !" என்று புகழ்ந்தார். இப்படியாக மூன்று மணி அவகாசமும் விரைவில் ஓடி, கதையும் முடிந்தது. ரஸிகர்களும் தாங்கள் இதுவரை இம்மாதிரிக் கதையே கேட்டதில்லையென்று பெரியண்ணா அவர்களையும் பாகவதரவர்களையும் புகழ்ந்தார்கள். தன்னுடைய தீர்க்கதரிசனம் வெகு அழகாகப் பலித்து விட்டதை யறிந்த பெரியண்ணா அவர்கள் இம்மாதிரி இன்னும் அநேக கதைகளைத் தயார் செய்யும்படிக் கிருஷ்ண பாகவதரவர்களைத் தூண்டி, ஊக்கமளித்ததுடன் தன்னால் கூடிய எல்லா உதவிகளையும் அளித்தார்.

காலக்ஷேபத் துறையில் பாகவதரவர்களுக்கு ஏற்பட்டிருந்த ஊக்கமும் அதன் பின் அவர் செய்து கொண்ட அபிவிருத்திகளும் :— ஆங்கிலத்தில், 'ரோம் என்ற நகரம் ஒரே நாளில் கட்டப்படவில்லை' என்று ஒரு பழமொழி உண்டு. அதுபோல், ஆறு வருஷகாலம் பெரியண்ணா அவர்களின் பேராதரவில் தயாரான தஞ்சை கிருஷ்ண பாகவதரவர்கள் காலக்ஷேபத் துறையில் எவ்வளவு ஊக்கம் கொண் டிருந்தார் என்பதையும், அதன் மூலம் அவர் படிப்படியாய்க் கியாதியடைந்த தையும் இங்குச் சுருக்கமாய்க் கூறுவது அவசியமாகிறது. மஹாஜனங்களின் பேராதரவு தனக்கிருப்பதை யுணர்ந்த பாகவதரவர்கள், தன்னுடைய விடா முயற்சியினாலும், இடைவிடாக் கேள்விகளினாலும் ஒவ்வொரு சரித்திரமாகத்

தயார் செய்து ஒன்றன் பின் ஒன்ருய்க் காலக்ஷேபமாய்ச் செய்ய ஆரம்பித்து விட்டார். வர வர கிருஷ்ண பாகவதரவர்களின் கதைகளுக்கு ஏராளமான கூட்டமும் விசேஷமான ஆதரவும் ஏற்படலாயிற்று. இத்துடன் பாகவத ரவர்களின் முயற்சியும் உழைப்பும் அதிகரித்துக் கொண்டே வந்தன. அந்தக் காலத்தில் படிப்படியாய்ப் பிரபலமாகிக் கொண்டு வந்த ஸ்ரீ த்யாகப்ரம்ஹத்தின் கீர்த்தனைகளைப் பாடம் செய்வதற்காக அடிக்கடி தில்லை ஸ்தானம் போய் ஸ்வாமிகளின் நேர் சிஷ்யராகிய ராமய்யங்கார் அவர்களை ஆச்ரயித்து, அநேகக் கீர்த்தனைகளை வெகு சீக்கிரமாய்ப் பாடம் செய்தார். இப்படியாகக் கதைக்கு அவசியம் என்று தோன்றும் ஒவ்வொரு துறையிலும் தன்னுடைய புத்தியைச் செலுத்தி அந்தந்தத் துறைகளில் வித்துவான்களாகவும் பண்டிதர்களாகவும் உள்ள பெரியோர்களைச் சந்திக்க நேரும் போதெல்லாம் அவர்களிடமிருந்து தனக்கு அவசியமான ஸாரமுள்ள பாகங்கள் எல்லாவற்றையும் சுலபமாய்த் தெரிந்து கொண்டார்.

தன்னுடைய தொழிலை அபிவிருத்தி செய்து கொள்வதில் இவருக்கு எவ்வளவு ஊக்க மிருந்தது என்பதற்கு ஓர் உதாரணம் கூற விரும்புகிறேன்.

தஞ்சாவூரில் அநேக மஹாராஷ்ட்ர மடங்கள் செழித்தோங்கி யிருந்தன. அநேகமாய் எல்லா மடங்களிலும் ராமநவமி உத்ஸவம் கொண்டாடுவார்கள். ராமநவமி யன்று 'ராமஜனனம்' கதை செய்வது வழக்கம். அநேக மடங்களில் இவருடைய கதையை விரும்புவார்கள். அவர்களுடைய வேண்டுகோளுக் கிணங்கி காலை 9 மணி முதல் 12 மணிவரை ஒரு மடத்திலும், மாலை 3 மணி முதல் 6 மணி வரை ஒரு மடத்திலும், இரவு 9 மணி முதல் 12 மணி வரையில் ஒரு மடத்திலுமாக, ஒரே நாளில் மூன்று கதைகள் செய்வார். மூன்றும் "ராம ஜனனம்" என்ற கதைதான் என்ருலும், மூன்று மடங்களிலும் திரளான கூட்டம் கூடும். அநேக ரஸிகர்கள் ஒருகதைகூட விடாமல் மூன்றையும் கேட்க முன் இடம்கூடப் பிடித்துக்கொள்வார்கள் என்ருல், அவருடைய கதைகளில் ஜனங்களுக்கு எவ்வளவு பிரமை இருந்தது என்பதை வாசகர்களே ஊகித்துக்கொள்ளலாம். இம்மாதிரியான 'ராம நவமி' ஸந்தர்ப்பங்களில் வேறு ஏதாவதொரு மடத்தில் 6 மணி முதல் 9 மணி வரை ஒரு மஹாராஷ்ட்ர பாவாவின் கதை நேர்ந்துவிட்டால் கிருஷ்ணபாகவதரவர்கள் தன்னுடைய சிரமத்தை எண்ணுமல் அதையும் விடாமல் சற்று நாழிகையாவது கேட்டுவிடுவார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

இப்படியாகப் பெயரும் புகழும் அவரைத் தானுகவே தேடிக்கொண்டு வந்தன. அழைப்பில்லாமல் அவர் கதை செய்யப் போவதேயில்லை. வெளியூர்களில் அநேக கதைகள் நடந்தன. விவாகாதி சுபமுகூர்த்தங்கள், கோவில் உத்ஸவங்கள், மகான்களுடைய உத்ஸவங்கள் ஆகியவைகளில் கதைசெய்ய இவரை எல்லா ரஸிகர்களும் அழைத்தார்கள்.

பாகவதரவர்களின் சென்னை விஜயம்:—கிருஷ்ணபாகவதரவர்களுடைய கீர்த்தியானது சென்னை வரையில் எட்டிவிட்டபடியால அவ்விடமிருந்து அழைப்புகளும் கிடைத்தன. இவருடைய கதைகளைக் கேட்ட சென்னைவாசிகள் மிகுந்த பிரமையை யடைந்தவர்களாய் இவரிடம் விசேஷமான அன்பையும், ஆதரவையும் காட்டினுர்கள். ஆரம்பகாலத்தில், பாகவத ஸம்ப்ரதாயப்படி பிரதிதினமும் இஞ்சுவ்ருத்தி செய்வார். தான் தங்கியிருந்த ஏகாம்பரேச்வரர் அக்ரஹாரத்தை ஒரு முறை சுற்றி வருவார். இதைப் பார்க்கத் திரளான ஜனங்கள் வர ஆரம்பித்துவிட்டார்கள். இதனுல் பாகவத கோஷ்டிகள் நகர்ந்து செல்வதற்குக்கூட இடமில்லாமல் போனதால், இரண்டு மூன்று நாட்களுக்குள் போலீஸார் அவ்விடம் வந்து ஜனங்களை ஒழுங்குபடுத்த வேண்டியதாயிற்று. பிறகு இதுவும் ஸாத்யமில்லாமல் போகவே, கூடியிருக்கும் ஜனங்

களை ஒழுங்காய் உட்காரவைத்த பின்பு இடையில் உள்ளபாதையின் மூலம் பாகவத கோஷ்டி போகவேண்டியதாயிற்று. இந்த ஏற்பாட்டினால் உட்காரும் இடத்தை முன்னதாகவே சம்பாதித்துக்கொள்ள எண்ணிய அநேகர் காலை 6 மணி முதல் அமைதியாய்க் கூடிவிடுவார்கள். காலை 8 மணிக்குப் பாகவதரவர்கள் கிளம்பி 9½ அல்லது 10 மணிக்குள் சுற்றி வந்துவிடுவார். மகாஜனங்களின் ஆதரவு வளர வளர முதல் நாள் சுமார் ஒரு கூடை அக்ஷதையும் 4,5 நாட்களில் தினம் ஒன்றுக்கு ஒரு சாக்கு அரிசியும், 10, 12 நாட்களில் 2, 3 சாக்குகளில் அரிசியும் கிடைக்க ஆரம்பித்தன. இத்துடன் எட்டியிருந்து வருவோர் ரூபாயாக ஸம்பாவனை செய்வார்கள்.

முதல்தடவையில் அவர் ஒருமாதம் சென்னையில் தங்கி, அதைவிட்டுப் புறப்பட்ட கடைசிநாள் காலை இஞ்சுவிருத்தியில், ரஸிகர்களால் பாகவதருக்கு ஒரு வெள்ளிச் செம்பும், பனாரிஸ் பட்டு, சால்வை, துப்பட்டாக்களும் அளிக்கப்பட்டதென்றால், அன்னாரிடம் ஜனங்களுக்கு ஏற்பட்ட பக்தியும் விசுவாசமும், மதிப்பும் அளவிட முடியாததென்றே சொல்லவேண்டும்.

சென்னையில் பிரதி தினமும் கிடைத்த அக்ஷதையைக் கொண்டு, வந்தவர்களுக்கு போஜனமுமளித்தார். அதன் பிறகு சென்னைப் பிரயாணம் ஏற்படும்போதெல்லாம் மாதக் கணக்கில் தங்கும்படி நேர்ந்தபடியால் கூடவே ஒரு பரிசாரகரையும் அழைத்துச் செல்வார். சென்னையில் அநேகமாய் வாரம் 4-5 கதைகளுக்குக் குறையாமல் நடக்கும். ஒரு முறை இவர் கதையைக் கேட்ட ரஸிகர்கள், மறு முறையிலிருந்து தாமாகவே தவறாமல் கேட்க வந்துவிடுவார்கள். தெலுங்கும், தமிழும் ஸமமாய் உலாவி வந்த அந்தக்காலத்தில் தெலுங்கு பேசும் வைசியர்களாகிய செட்டிமார்கள், இவரிடம் பேரன்பையும் பெரும் மதிப்பையும் கொண்டது ஆச்சரியமில்லை. ஒவ்வொரு கதையின் முடிவிலும் அவர்கள் எல்லோரும் இவருடைய பாதங்களில் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டுதான் வீடு திரும்புவார்கள். இவ்வாறு இவருடைய கியாதியானது ராஜதானி பூராவும் பரவ ஆரம்பித்து விட்டபடியால், மைசூர், திருவனந்தபுரம், ராமனாதபுரம், புதுக்கோட்டை போன்ற சமஸ்தானங்களிலிருந்தும் தனவைசியர்களடங்கிய செட்டி நாடுகளிலிருந்தும், இதர ஜில்லாக்களிலிருந்தும் இடைவிடா அழைப்புகள் கிடைத்தன. எல்லாவிடங்களிலும் அமோகமான ஆதரவும் கிடைத்தன.

பாகவதாவர்களின் காலக்ஷேபங்களில் உள்ள விசேஷமான அம்சங்கள் :—அவருடைய காலக்ஷேபங்களில் எந்தெந்த அம்சங்கள் விசேஷமுள்ளவை என்று விவரிப்பதைவிடக் "கதைகளில் அவர் பாடும் ஒவ்வொரு பாட்டையும் ஒவ்வொரு பேச்சையும்—ஒவ்வொரு அசைவையுங்கூட மஹாஜனங்கள் விசேஷமாய்க் கருதினார்கள்" என்று சுருக்கமாய்ச் சொல்லிவிடலாம். விவரிக்குமிடத்து, முதலில் ஸங்கீதத்தை யெடுத்துக்கொள்வோம். கம்பீரமும் சுருதி லீனமும் வாய்ந்த அவருடைய சாரீர வசதியால், கன, நயங்கள் வாய்ந்த கர்நாடகம் ஹிந்துஸ்தானி ஆகிய ஸங்கீதங்களை அந்தந்த எழில்களுடன் அழகான வர்ண மெட்டுகளில் அவர், கவர்ச்சியாயும் கச்சிதமாயும் பாடும்போதும் தியாகராஜ ஸ்வாமிகளின் கீர்த்தனங்களை ப்ராசீன பாடாந்திரங்களுக்கு இணங்க சீர்திருத்தி, சங்கதிகளை நன்கமைத்து சமய ஸந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு கதைகளில் பாடும்போதும் மஹாவைத்தியநாதையர், பட்டணம் சுப்ரமண்ய ஐயர், சரப சாஸ்திரிகள் போன்ற மஹா மேதாவிகளான ஸங்கீத வித்துவான்கள் பிரமித்துவிடுவதுடன், அதற்கு மேல் எவ்வித சீர்திருத்தமும் அதில் அவசியமில்லையென்றும் எண்ணினார்கள். கதைகளில்அவர் செய்திருக்கும் சிட்டாஸ்வரங்களையும் தில்லானக்களையும் பாடும்போது, அவைகளில் உள்ள அழகில் மெய்ம்மறந்துவிடுவார்கள். இதே மாதிரி மஹாராஷ்ட்ர கதை பந்தாக்களில் உள்ள ஸாக்கி - தண்டீ - ஓவி - ஆர்யா - அபங்கம் -

சந்தம் - கனுக்ஷரி - கேதாவளி - மத்த கோகிலம் - அஞ்ஜனீ கீதம் - கடாவ் - லாவணீ - துருபத் - கியால் - டப்பா - டோம்ரீ - தில்லானு போன்ற எந்த உருப்படியை அவர் பாடின போதிலும், அதில் ப்ரவீணர்களாயுள்ள பாவாக்கள், அந்தந்த பாவங்களுக்கேற்றவாறு, அவர் வர்ண மெட்டுகளை யமைத்துப் பாடும் அழகையும், பாஷையின் சுத்தமான உச்சரிப்பையுங்கண்டு அதிசயப்படுவார்கள். தெலுங்கில் உள்ள கீர்த்தனைகள் - பதங்கள் - தருக்கள் - பத்யங்கள் - த்விபதங்கள் - ஜாவளிகள் ஆகிய உருப்படிகளைப் பாடுகையில் அதைக்கேட்கும் ஆந்திரதேசத்தவர்கள், இவரை ஓர் ஆந்திரராகவே எண்ணுவார்களேயன்றி, தமிழன் என்று சொன்னால்கூட நம்பமாட்டார்கள். வேத சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்த மஹா மஹோ பாத்யாயர்களான மன்னார்குடி ராஜு சாஸ்திரிகள், திருவிசை நல்லூர் ராமசுப்பா சாஸ்திரிகள் போன்றவர்களும் - ராமாயண - பாகவத - பாரதங்களாகிற புராண ப்ரவசனங்களில் தன்னிகரில்லாக் கீர்த்தியுடன் விளங்கிய காப்பணுமங்கலம் சாமி சாஸ்திரிகள், பரித்தியூர் கிருஷ்ண சாஸ்திரிகள் போன்ற பௌராணிகர்களும் பாகவதர் சமயோசிதமாய்ச் சொல்லும் சுலோகங்கள், சூர்ணிகைகள், அஷ்டபதிகள் தரங்கங்கள் ஆகியவைகளையும் சொற் சுவை பொருட் சுவையுடன் அவர் ப்ரவசனம் செய்யும் அழகையுங் கண்டு பரம சந்தோஷமடைவார்கள். ஆகவே கதைக்கு வேண்டிய எல்லாப் பாஷைகளிலும் அவருக்குத் தகுந்த பரிச்சயம் உண்டு என்பதையும், அவைகளின் பதவுரை, பொழிப்புரை, கருத்துரை போன்றவைகளை அவர் தமிழில் எடுத்துச் சொல்லும்போது, அந்தந்தப் பாஷைகளில் நிபுணர்களாயுள்ள எல்லாப் பண்டிதர்களும் தங்களால் கூட இவ்வளவு கச்சிதமாயும் அழகாயும் சொல்ல முடியாது என்பதையும் உணர்ந்தார்கள். கதைகளில் அவர் பிரவசனம் செய்யும் அழகு மிகவும் ப்ரத்யேகமானது. சில பேச்சுகள் ஸங்கீதத்துடன் இணையும்; சில பாகம் ஸம்பாஷணைகளாய் விளங்கும்; சில பாகங்கள் உபந்யாசம் போல் இருக்கும்; சில பாகங்கள் சொற்பொழிவாகவும் தோன்றும். பேச்சில் அனுவசியமான அவசரமோ அல்லது தாமதமோ இராது. அஸப்யமான வார்த்தைகளோ, அமங்கலமான சொற்களோ, அனுவசியமான பேச்சோ, கதைகளில் வரவே வராது. கதைகளில் வரும் பாத்திரங்களுக்கேற்ப கன நயங்களுடனும் பூர்ண பாவத்துடனும் அந்தந்த ரஸங்கள் ததும்ப அந்தந்தப் பாத்திரமாகவே அவர் தன்மயப்பட்டுப் பேசுகையில், கதையில் உள்ள எல்லாச் சம்பவங்களும், பிரத்தியக்ஷமாய்த் தங்கள் எதிரிலேயே நடப்பதாய் எண்ணி சபையோர்கள் பரவசமாவார்கள். நடிப்புக் கலையில் இணையற்றவர்களாய் விளங்கிய நடிகர்கள், இவர் கதையைக் கேட்கும்போது, வேஷம், திரை இவைகளின் ஒத்தாசையே யில்லாமல், கதைளில் வரும் அவ்வளவு பாத்திரங்களாகவும் இவர் ஒருவரே யிருந்து தன்மயப்பட்டு பாடிப்பேசி நடிக்கும் வன்மையைக் கண்டு நாம் எல்லாம் இவருக்கு எம்மாத்திரம் என்று எண்ணிக் குன்றிப் போவார்கள். அதேமாதிரி பரதநாட்டியக் கலையில் அக்காலத்தில் இணையற்று விளங்கிய பெண்மணிகள், பாகவதரவர்களின் காலில் அடவுச் சொற்கள் அவ்வளவும் இணையற்ற அழகுடனும் விபரத்துடனும் பேசுவதையும், தீர்மானங்கள் சொற்கட்டுகள் கச்சிதமாயும் சுத்தமாயும் பேசுவதையும், அவருடைய அபிநயங்கள் மிகுந்த உன்னதமான முறையில் விளங்குவதையுங் கண்டு நாணினார்கள். சிற்சில சந்தர்ப்பங்களில் தெருக்கூத்து, பொம்மலாட்டம், திரௌபதியம்மன் கதை, லாவணிகள், ஊமையன் சண்டை போன்ற நாட்டுப் பாடல்களைப் பாடி, அவர் வர்ணித்துப் பேச ஆரம்பித்துவிட்டால், தாங்கள் அவைகளை நேரில் பார்ப்பது போல் எண்ணி பாமர ஜனங்கள் குதூஹலிப்பார்கள். இப்படியாகப் பண்டிதர்கள முதல்

பாமரர்கள் வரையில் உள்ள ஸமஸ்தமான ஜனங்களும், இவருடைய கதைகளில் மட்டற்ற மதிப்பை வைத்திருந்தபடியால், இந்தக் காலக்ஷேபக் கலைக்கே ஓர் அவதார புருஷனாய் இவர் விளங்கினார் என்பது மிகையாகாது.

பிற்காலத்தில் பெரியண்ணா அவர்கள் பாகவதரவர்களுக்கு அளித்த பொறுப்பு:—இப்படியாகக் கிருஷ்ண பாகவதரவர்களின் கீர்த்தியானது வெகு சீக்கிரமாய் விசாலமாகி வருவதைக் கவனித்துப் பரம திருப்தியை யடைந்து வந்த பெரியண்ணா அவர்கள் தன்னுடைய ஜீவிய காலத்தில் விமரிசையாய் நடத்தி வரும் எல்லா உத்ஸவங்களும் தனக்குப் பிற்காலத்திலும் நிரந்தரமாயும், ஒழுங்காயும் நடைபெறவேண்டும் என்ற அவாவினால், தனது ஐவேஜிகளின் பெரும்பாகத்தை இந்த தர்மங்களுக்காக ஒதுக்கி,1875ம் ஆண்ல்டிஓர் உயில் எழுதி வைத்ததுடன், இந்தத் தர்ம சொத்துக்களைப் பரிபாலித்து நித்யோத்ஸவம், பக்ஷோத்ஸவம், ஸம்வத்ஸரோத்ஸவம் ஆகியவைகளைத் தன் அபிப்ராயப்படி நடத்த சில டிரஸ்டிகளையும் நியமித்து, கிருஷ்ண பாகவதரவர்களை நிர்வாக டிரஸ்டியாகவும் நியமித்து, சகல பொறுப்புகளையும் அளித்தார். கிருஷ்ண பாகவதரவர்களும் தன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட பொறுப்பைத் தன்னுடைய கடைசிக் காலம் வரை திறம்பட நிர்வகித்து உத்ஸவ காலங்களில் அநேக பாகவதர்களை வரவழைத்து பெரியண்ணா அவர்களின் அபிப்ராயம் போல் உத்ஸவங்களை வெகு சிறப்பாகவும், விமரிசையாகவும் நடத்தி வந்தது இங்குக் குறிப்பிடத் தகுந்தது.பெரியண்ணா அவர்களின் தீர்க்க தரிசனமும் கடைசிவரை நிறைவேறிற்று.

பாகவதரவர்களின் முக்கிய சிஷ்யராகிய தஞ்சாவூர் பஞ்சாபகேச பாகவதரவர்களின் குருகுலவாஸம்:—ஆதியில் கிருஷ்ண பாகவதரவர்களுக்கு முக்கிய ஸகாயராயிருந்தவர், தஞ்சாவூர் கோவிந்த பாகவதர். தஞ்சை ராமராவ் என்பவர் வெகு காலம் மிருதங்கம் வாசித்திருக்கிறார். சுமார் 10 அல்லது 12 வருஷங்களுக்குப் பிறகு கோவிந்த பாகவதருக்குத்தானும் கதை செய்ய வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டு விட்ட படியால், பாகவதரிடமிருந்து பிரிந்து விட்டார். இதைச் சிறிதும் லக்ஷியம் செய்யாத பாகவதரவர்கள் பரத சாஸ்திரத்தில் தனக்குக் குருவாய் இருந்து வந்த திருப்பூந்துருத்தி அப்பாத்துரை அய்யர் அவர்களின் வேண்டுகோளின்படி அவர் குமாரராகிய 16 வயதுள்ள பஞ்சாபகேசன் என்பவரைத் தனக்கு ஸஹாயமாய்ச் சேர்த்துக் கொண்டு வெகு சீக்கிரத்தில் தயார் செய்து விட்டார். இயற்கையிலேயே நல்ல சாரீரமும், சுருதி, லய, ஸ்வர ஞானமுமுள்ள பஞ்சாபகேசன் என்பவரும், இரண்டு மூன்று வருஷங்களில் அவருடைய பிரதான சிஷ்யர் என்ற ஸ்தானத்தை மிகுந்த புகழுடன் வகித்து சுமார் 18 வருஷகாலம் அதாவது குருவின் கடைசிக் காலம் வரை அவரை விட்டுப் பிரியாமல் இருந்தது குறிப்பிடத் தகுந்தது. கிருஷ்ண பாகவதரவர்களுக்குப் பிடில், சுரகெத்து, மிருதங்கம், கஞ்சிரா, ஹார்மோனியம் ஆகியவைகளை நன்கு வாசிக்கத் தெரியும். ஆதியில் அநேக பாவாக்களின் கதைகளுக்குப் பிடில் வாசித்து அவர்களின் வர்ண மெட்டுக்களை லகுவாய் சம்பாதித்து மிருக்கிறார். ஆனால் தன் சிஷ்யன் நன்றாய்ப் பிடில் வாசிப்பதையும், இடைவிடாஉழைப்பினாலும் உயர்ந்த கேள்விகளினாலும் அவன் மஹாவைத்யனாதையர் பட்டணம் சுப்ரமண்ய ஐயர் சரப சாஸ்திரிகள் போன்ற வித்துவான்களின் கச்சேரிகளுக்குத் திறம்படவாசித்து நல்ல கியாதியை யடைந்து வருவதையும் கண்டவுடன், தான்பிடில்வாசிப்பதை மெதுவாய் நிறுத்திக்கொண்டு சுரகெத்து வாத்யத்தைவாசிப்பதில் பெரிதும் ஈடுபட்டார். இதனால் பாகவதரவர்கள் சுரகெத்தும் பஞ்சாபகேச பாகவதரவர்கள் பிடிலும் சேர்ந்து வாசித்துக் கச்சேரி செய்ய ஆரம்பித்தார்கள். ஒரே விதமான பாடாந்திரம் உள்ள அநேக கீர்த்தனைகளையும்மற்ற சில்லரை உருப்படிகளையும் இவர்கள் இருவரும் தந்தி வாத்யத்தில் இழைந்துவாசிக்கை

யில் நாத ப்ரம்ஹமே தாண்டவமாடும். இவர்களுடன் நாராயணசாமி அப்பா அவர்களும் மிருதங்கம் வாசிக்க ஆரம்பித்து விட்டால், சபையில் உள்ளவர்கள் தாங்கள் ஏதோ கந்தர்வ லோகத்தில் சஞ்சாரம் செய்வதாகவே எண்ணுவார்கள்.

பாகவதரவர்களின் ஜமாவில் இருந்தவர்களின் சுருக்கமான வரலாறுகள்:—இரண்டாவது பின்பாட்டாக இருந்தவர்களில், தஞ்சாவூர் மருதப்பாபிள்ளை என்பவர் அநேக வருஷங்கள் இவருடைய ஜமாவில் நல்ல புகழுடன் விளங்கினர். பாகவதரவர்களின் சாரீரத்திற்கேற்றவாறு, பஞ்சாபகேச பாகவதர், மருதப்பாபிள்ளை இவர்களின் சாரீரங்கள், நல்ல கணிப்புடனும் வேலைப் பாடுகளுடனும், சுருதி சுத்தமாயும், அமைந்திருந்த படியாலும், பாகவதரவர்களுடையசங்கீதம் சுருதி சுத்தமாயும், ஸ்வர சுத்தமாயும், ரஸங்களுக்கேற்ற வர்ண மெட்டுக்களுடனும், பாவங்களைப் போஷிக்கும் படியான காலப் பிரமாணங்களுடனும், ராக பாவங்கள் ஜீவகளையுடனும், தாளங்கள் லயக்கணிசத்துடனும் ஆவர்த்த சுரங்களுடனும் விளங்கின படியாலும், கிருஷ்ண பாகவதரவர்கள் முதலில் பாடி, தஞ்சாவூர் பஞ்சாபகேச பாகவதரும் மருதப்பாவும் பின்னல் முறையாகச் சேர்ந்து பாடியபோது, அந்தச் சங்கீதத்திற்கு உண்டாயிருந்த மெருகு, கௌரவம், மற்ற பாகவதர்களால் உண்டாக்கப்படவில்லை. ஆகவே அந்த சங்கீதத்தைத் தேவகானம் என்றும் கந்தர்வகானம் என்றும் ரஸிகர்கள் கருதினர்கள். மிருதங்கம் வாசிப்பதில் இணையற்று விளங்கிய தஞ்சாவூர் நாராயண சாமி அப்பா அவர்கள், பாகவதரவர்களின் ஏராளமான கதைகளுக்கு வாசித்திருக்கிறர். என்றாலும், அவைகள் அநேகமாய்த் தஞ்சாவூரிலும், அதற்குச் சமீபத்தில் உள்ள ஊர்களிலும், குறிப்பிட்ட சில நகரங்களிலும்தான் ஏற்பட்டிருக்கின்றன. தஞ்சாவூர் தாஸ் ஸ்வாமிகள் துக்காராம் ராவ், சேதுராம் ராவ் ஆகிய பிரசித்த வித்துவான்களும் அநேக கதைகளுக்கு வாசித்திருக்கிறர்கள். மைலாட்டூர் கிருஷ்ணையர் என்பவர்ஸெட்டுடன் சுமார் ஐந்தாறு வருஷங்கள் திறம்பட வாசித்து நல்ல கியாதியை யடைந்தார். கடைசியாய் அயலூர் பரமேச்வர அய்யர் ஸெட்டுடன் சுமார் 2, 3 வருஷங்கள் மிருதங்கம் வாசித்திருக்கிறர்.

சென்னையில் நடந்த அநேகம் கதைகளுக்கு ஆதியில் சாமி அய்யர் என்பவர் (இவர்தான் சென்னை பிடில் பால கிருஷ்ணையரின் தகப்பனர்) பிடில் வாசித்திருக்கிறர். சிலகாலம் சென்னை கிருஷ்ணமாசாரியார் என்பவரும் அநேக கதைகளுக்குப் பிடில் வாசித்திருக்கிறர். கடைசியாய்ப் பிடில் பால கிருஷ்ணையர் தஞ்சாவூர் பஞ்சாபகேச பாகவதரிடம் சிஷ்யராய் பிடில் அப்பியாஸம் செய்து வந்த காலத்தில் பாகவதரவர்களின் அநேக கதைகளுக்கு வாசித்திருக்கிறர்.

சென்னை ஸபைகள்:—சென்னையில் ஸங்கீத ஸபைகள் ஏற்படுவதற்கு மூல காரணமாயிருந்தவர் தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதர். இவருடைய காலக்ஷேபங்களை அடிக்கடி கேட்கவேண்டும் என்ற அவாவினுல் இவருடைய ஆதரவை முக்கிய துணையாகக் கொண்டு முதன் முதலாக 1895-ம் ஆண்டில் இதில் "பகவத்கதாப்ரஸங்க ஸாபா" என்ற பெயருடன் சென்னை தொண்டை மண்டலம் ஸ்கூல் ஹாலில் ஒரு ஸபையை ஆரம்பித்தார்கள். பிறகு அதைப் போன்ற பல ஸபைகளும் ஏற்பட்டன. இவைகளில் காலக்ஷேபங்களுக்கே முக்கிய இடம் கொடுக்கப்பட்டதால் கதைகளுக்குத்தான் அதிக செலாவணி இருந்தது. தஞ்சாவூர் கிருஷ்ணபாகவதர் அடிக்கடி இவைகளுக்கு அழைக்கப்பட்டார். இவருக்கு ஒழிவில்லாத ஸந்தர்ப்பங்களில மற்ற சில பாகவதர்களும் அழைக்கப்படுவதுண்டு. இதுவும் முடியாதபோது கச்சேரிகள் ஏற்பாடு செய்வார்கள். ஆகவே அதிக செலாவணியுள்ள காலக்ஷேபங்களில் மோகங்கொண்ட அநேக இளம் வித்துவான்கள் தாங்களும் கதைசெய்ய

எண்ணியதில் ஆச்சரியமேயில்லை. ராமனுதபுரம் ஸ்ரீனிவாஸய்யங்கார் கூட ஒரு சமயம் தானும் காலக்ஷேபஞ் செய்யலாமா என்றெண்ணிய துண்டு. கல்லிடைக்குறிச்சி வேதாந்த பாகவதரும் சில காலம் கதாகாலக்ஷேபங்கள் செய்தார்.

இம்மாதிரியாக இந்தக் காலக்ஷேபக்கலைக்கு ஓர் அலாதியான கௌரவத்தை உண்டுபண்ணி, அதை மஹோன்னத ஸ்திதிக்குக் கொண்டுவந்தவர் கிருஷ்ணபாகவதர் தான். கடைசியாக சென்னை ஸபாவில் கதைகளுக்கு ரூ 100க்குக் குறையாமலும், கல்யாண வீட்டுக் கதைகளுக்கு ரூ200 வரையிலும் செட்டி நாட்டுக் கதைகளுக்கு ரூ 300க்குக் குறையாமலும் ஸம்மானமாக வாங்கி வந்தார். சமஸ்தானங்களில் அநேகந் தடவைகளில் ஆயிரக் கணக்கான ரூபாய்களையும், தோடாக்கள், மெடல்கள், சாதராக்கள், சால்வைகள் போன்ற விலையுயர்ந்த ஸம்மானங்களையும் ஏராளமாய்ப் பெற்ருர். பொதுவாய் "பாகவதரவர்களுக்கு இஞ்சுவ்ருத்திதான் கதி" என்றிருந்த வழக்கத்தை மாற்றி, அவர்கள் ரேட்டுகளும் ஸம்மானங்களும் பெற லாயக்குள்ளவர்கள் என்பதை ஸ்தாபித்தார்.

பாகவதரவர்களின் ஸ்வபாவமும் குடும்ப வரலாறும்:—பாகவதரவர்கள் மிகவும் அடக்கமான ஸ்வபாவம் உள்ளவர். குறிப்பிட்ட பலரிடமின்றி மற்றவர்களிடம் கலகலப்பாய்ப் பேசமாட்டார். எப்பொழுதும் கதை சம்பந்தமான விஷயங்களில் புத்தியைச் செலுத்திச் சிந்தனை செய்வதிலும், வாசிப்பதிலும், எழுதுவதிலும், வர்ணமெட்டுகள், சிட்டாஸ்வரங்கள் அமைக்கும் விஷயங்களிலும் ஊக்கமாகயிருப்பாரேயன்றி அனுவசியமான பொழுதுபோக்கே யிராது. தஞ்சாவூர் பஞ்சாபகேச பாகவதரவர்கள் சிஷ்யராய் அமர்ந்த பிறகு, தொழில் சம்பந்தமான எல்லா விஷயங்களையும் அவரிடம் ஒப்புவித்து விட்டபடியால், கதைகளையும், ரேட்டுகளையும் ஒப்புக்கொள்ளும் விஷயத்தில் கூட அவர் ஈடு படுவதில்லை. கதைக்கு யார் அழைக்க வந்தாலும் "சிஷ்யன் பஞ்சாபகேசன் வடக்கு வீதியிலிருக்கிருன்; அவனிடம் போய் எல்லாவற்வையும் பேசித் தீர்மானித்துக்கொள்ளுங்கள்" என்றனுப்பிவிடுவார். கதைகளுக்காக ஊரைவிட்டுக் கிளம்பியது முதல் திரும்பிவந்து சேரும்வரையில்ஏற்படும் எல்லா வரவு செலவுகளையும், பஞ்சாபகேச பாகவதர்தான் கவனித்துக்கொள்ள வேண்டும். ஊர் திரும்பியவுடன் கணக்குகளையும் பணத்தையும் ஒப்புவிக்கும்போது கூடப் பணத்தைத் தன் கையால் தொடும் வழக்கமே யில்லை. தாயாரைக் கூப்பிட்டு "இதை யெடுத்து உள்ளே வை" என்றுசொல்லிவிடுவார். இளமையிலிருந்தே தாயாரின் பாதுகாப்பில் இருந்து வந்தபாகவதரவர்களுக்குத் தன் தாயாரிடம் மட்டற்ற பக்தி இருந்தது. அவளுடைய வார்த்தைக்கு மறுவார்த்தையே அநேகமாய்க் கிடையாது. குடும்பவிசாரமே இவருக்குக் கொஞ்சமும் இல்லாமல் அந்தம்மாள் பராமரித்து வந்தது குறிப்பிடத்தக்கது. வெகுகாலம் வரை அவர் தன்னுடைய விவாக விஷயத்தில் கவலை கொள்ளவேயில்லை. ஆனல் அடிக்கடி தாயார் வற்புறுத்தி வந்ததற்கிணங்கி, அவளால் பார்த்துத் தீர்மானிக்கப்பட்ட ஒரு கன்னிகையைத் தனது 30-வது வயதில் மணந்தார். பாலியத்தில் மிகவும் கஷ்டப்பட்டு, பூர்வபுண்ய விசேஷத்தால் இணைப்பில்லாத கீர்த்தியையும், சகல சம்பத்துக்களையும் பெற்றும், உசிதகாலத்தில் ஸந்தான பாக்யமேற்பட வில்லையே என்று வெகுநாள் விசாரமடைந்திருந்த அந்தத் தாயாரின் கலி தீர, 1894-ம் ஆண்டில் பாகவதரவர்களுக்கு ஸீமந்தபுத்ரி பிறந்ததைக் கண்டானந்தித்து, சிலநாட்களுக்கெல்லாம் அந்தம்மாள் காலகதி யடைந்தாள். பாகவதரவர்களும் தான் தாயில்லாப் பிள்ளையாய்ப் போனதைப்பற்றி வருந்தினர். சில வருஷங்களுக்குப் பிறகு அவருக்கு இரண்டாவது பெண்ணும் பிறந்தது.

தஞ்சாவூர் வெங்கடேசப் பெருமாள் சந்நிதியில், தன் அபிப்பிராயப்படி ஒரு நூதன கிருஹத்தை யமைத்து அதில் வெகுகாலம் ராமநவமி உத்ஸ

வத்தைப் பிரதி வருஷமும் 10 நாட்கள் வெகுவிமரிசையாய் நடத்தி, அநேக ஸங்கீத வித்துவான்களையும் பாகவதர்களைவும் வரவழைத்துச் சிறப்பாய்க் கொண்டாடினர். 'ராமஜனனம்' முதல் 'ராமபட்டாபிஷேகம்' வரையில் அநேக கதைகளாய்த் தொடுத்துக் காலக்ஷேபமாய்ச் செய்தார். நாதப்ரம்ஹ உபாஸனையில் முறைப்படி ஈடுபட்டிருந்த மகிமையால் தனக்கு மோக்ஷம் நிச்சயமாய்க் கிடைக்கும் என்று அவர் அடிக்கடி சொல்வதுண்டு. இப்படியாகச் சுமார் 32வருஷகாலம் காலக்ஷேபத்துறையில் ஈடுபட்டு, தன்னிகரில்லாக் கியாதியுடன் விளங்கி, 1903-ம் வருஷத்தில் சில நாட்கள் நோய்வாய்ப்பட்டிருந்து பரமபதமடைந்தார். ஸங்கீத உலகிற்கு இவருடைய பிரிவால் ஏற்பட்ட நஷ்டமும், ரஸிகர்களின் கஷ்டமும் அளவிடமுடியாது. இவருக்கு இரண்டு பெண்களைத் தவிர ஆண் சந்ததியில்லை. மூத்த பெண்ணுக்கும் சந்ததியில்லை. இளைய பெண்ணின் சந்ததிகள் இருக்கிறார்கள். இரண்டு வருஷங்களுக்குமுன் பாகவதரவர்களின் பாரியை காலமானார். இரண்டு பெண்களும் மற்றவர்களும் பூர்வீகக் கிருஹத்திலேயே இருந்து வருகிறார்கள்.

II

வாழ்த்துப் பாக்கள்

கிருஷ்ண பாகவதரவர்களை அநேக சந்தர்ப்பங்களில் புகழ்ந்து பல கவிகள் பலவிதமாய்ப் பாடியிருக்கிறார்கள். அவைகள் எல்லாம் இப்போது கிடைக்கவில்லை. கிடைத்த சிலவற்றை இவ்விடம் குறிப்பிட விரும்புகிறேன்.

சாமக்குளம் வித்துவான் கோயம்புத்தூர் வெங்கட்டரமண தாஸ் பாடியது :—

(1) உம்பர்தம் நாட்டிலே தும்புருவும் நாரதரும்
உண்டென்பர் நாம் காண்கிலோம்
இம்பர்தம் நாட்டிலே வேணுகோபாலனிசை
யென்னாளும் நாம் கேட்கிலோம்
நம்பினோர் தம்மை காக்கும் தஞ்சைவளர் கிருஷ்ணையர்
நல்வாக்கி லின்று கண்டோம்.
அம்புவியில் எல்லோரும் சிந்தைகளி கூர்ந்திட
வமுத ப்ரஸங்க மிதுவே.

ஷை வித்துவான் கிருஷ்ணபாகவதரவர்களின் திருவாக்குக்கும் திருப்பாற்கடலுக்கும் சிலேடையாகப் பாடியது :—

(2) ஆதி நாரணன்வந்து குடிகொண்டு நிற்றலால்
அவிரு முத்துக்கள் தோற்றலாற்
அழகுபெரு நீர்துளித்திடுகின்ற காக்ஷியால்
அலகில் பொருளுறை மாட்சியால்
நீதிசெறி பல சங்கமேறலா லின்றுமதி
நின்றகலை கண்டுயர்தலால்
நிகரற்ற பெரியவிட மதனில் வந்துறுதலால்
நேர்மைமிகு பொன் பெறுதலால்
தீதில் புலவோர்கள் கொள்ள விண்ணமுத மீதலாற்
தெளிவுளோர் பலர் சூழ்தலால்
திண்மை மிகு மந்தரச்செய்கை சில காட்டலாற்
சிலமாந்தர் துயிலோட்டலால்
மேதினியில் நாற்புறமு மோதலா லொருதஞ்சை
வியநகரில் வந்த மறையோன்
மெய்யறிவர் புகழ்கிருஷ்ண ஐயர் திருவாக்கதே
விளங்கு பாற்கட லாமரோ.

காரைக்குடி பாலு கவிராயர் பாடியது :—

(3) நவ நவமாயினிமை சுரந்தொழுகு செழுங்
கனியெனவும் நவை தீர்ந்தோங்கும்
சுவைமிகு பார்க்கட லினெழும் சுதையெனவும்
கதையனைத்துஞ் சொல்ல வல்லோன்
புவியிடத்து யாவனென்றேன் தஞ்சைநக
ரமர் கிருஷ்ண பூமானென்றார்
அவனமிர்தக் கதை கேட்டேன் இதரர்கதை
நீண்ட கதையா யின்றன்றே.

இம்மாதிரி கற்றோரும் மற்றோரும் ஒருங்கே புகழ்ந்த கிருஷ்ண பாகவதரவர்களின் கதைகளைக் கேட்கும் ஜனங்களில் சிலர் அநேக சந்தர்ப்பங்களில் மெய்மறந்து நடந்துகொண்ட சம்பவங்கள் பல; அவற்றில் ரஸமான சில நிகழ்ச்சிகளை இங்கு எழுத விரும்புகிறேன்.

ரஸமான சம்பவங்கள்:—கிருஷ்ண பாகவதரவர்கள், முதல் முதலில் சென்னைக்குப் போயிருந்த சமயம் ஒரு வீட்டில் 'ப்ரகலாத சரித்திரம்' கதை செய்தார். ஹிரண்ய கசிபுக்கும் ப்ரஹ்லாதனுக்கும் நடந்த கடைசி ஸம்வாதத்தைப் பக்தி வெள்ளம் பெருகப் பாகவதரவர்கள் சொல்லி வருகிறார்:— "ஹே ப்ரஹ்லாதா! எங்கும் நிறைந்த உன் ஹரி இந்தத் தூணில் இருக்கிறானா?" என்றவுடன் "அவர் இல்லாத இடமேயில்லை! இந்தத் தூணில் மட்டுந்தானா?" என்று சொல்லி "தூணிலுமுளன்" என்ற கம்ப நாட்டாழ்வாரின் பாட்டைப் பாடி முடித்துவிட்டுப் பாகவதரவர்கள், "இதைக் கேட்ட ஹிரண்ய கசிபு பரம கோபத்தையடைந்தவனாய் அந்தத்தூணை ஓங்கிஒருகுத்துக் குத்தினான். உடனே கட கடவென்ற சப்தம் கேட்டது" என்று சொல்லி முடிப்பதற்குள் எதிரில் உட்கார்ந்து கதை கேட்டுக் கொண்டிருந்த நரஸிம்ஹ உபாஸகரான ஒரு செட்டியார், பாகவதரை ஹிரண்யகசிபுவாய் எண்ணி, உபாஸனா மகிமையால் தானே நரஸிம்ம மூர்த்தியாய் மாறி விட்டார். கண்மூடிக் கண்திறப்பதற்குள் ஒருஹுங்காரத்துடன் பாகவதர் மேல் பாய்ந்து பலம் பொருந்திய தன் கைகளினால் பாகவதருடைய குரல்வளையை பிடித்து நெறிக்க ஆரம்பித்து விட்டார். சபையில் உள்ளவர்களும் மெய்மறந்திருந்த படியால், விஷயத்தை யறிந்து கொண்டு பாய்ந்து செட்டியரைப் பாகவதரிட மிருந்து பிரித்து, வெளியில் அழைத்துப் போவது மிகவும் சிரமமாகி விட்டது. உள்ளே பாகவதரவர்களை ஆச்வாஸப்படுத்தவும், வெளியில் ஆவிர்ப்பவித்திருந்த நரஸிம்ம மூர்த்தியை சாந்தப்படுத்தவும் மலையேற்றசுமார் 15 நிமிஷங்களுக்கு மேலாகிவிட்டது. அன்று முதல் பாகவதரவர்கள் எந்த இடத்தில் இந்தச் சரித்திரத்தைச் செய்யும்படி நேர்ந்தாலும் இந்த ஸமயம் வரும்போது "ஸபையில் நரஸிம்ம உபாஸகர்களான பக்திமான்கள் யாராவது இருந்தால் அவர்களை தயவுசெய்து வெளியில் போய்விடும்படிக் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று தெரிவித்த பிறகு தான் மேல் கதையைத் தொடருவார்.

சென்னையில் பெயர்பெற்ற வாஸனைத் திரவிய வியாபாரியாகிய அப்துல் ரஹிமான் என்ற முஸ்லிம் "ராமதாஸ் சரித்திரம்" என்ற கதையை மெய்மறந்து கேட்டு வருகையில் பாகவதரவர்கள் கதை முடிவில் "நவாப் தன்னுடைய தெய்வமாகிய அல்லாவை ஸ்தோத்திரம் பண்ணினார்" என்று சொல்லி "லாயிலா ஹி லெல்லா" என்ற உருது உருப்படியைப் பாடியவுடன், பாகவதரையே ஸாக்ஷாத் நவாபாக எண்ணி அவரை நெருங்கி எதிரில் மண்டியிட்டு ஸலாம் செய்து வணங்கினார். மறு நிமிஷத்தில் இதுவரை தான் கேட்டது கதைதான் என்ற உணர்வு வந்தவுடன் ஸமீபத்தில் உள்ள தன் ஜாகைக்கு ஓடிப்போய் முஸ்லிம்கள் அணியும் விலையுயர்ந்த ஒரு ஜரிகைப் பட்டைப் பாகவதருக்குச் சன்மானமாய் அளித்தார். அதுமட்டுமா? அன்று

நரசிம்ம பாகவதர்

இவர் கிருஷ்ணபாகவதரவர்களின் ஸமகாலத்திலும் பின்னிட்டுச் சில காலமும் இருந்தார். ஸத்குரு ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகளின் சிஷ்யராகிய ஸங்கீத வித்வான் திருநெய்த்தானம் ராமுவையங்காரிடம் இவருக்கு அய்யரவர்களின் ஏராளமான கீர்த்தனைகள் பாடமுண்டு. இவருடைய தம்பி பஞ்சு பாகவதரும் கதைகளில் இவருக்கு உதவியாய்ச் சிலகாலம் இருந்தார். ப்ராசீன ஸம்ப்ரதாயத்தை அனுசரித்தே இவருடைய கதைகள் இருந்துவந்தபோதிலும், ஸ்வாமிகளின் கீர்த்தனைகளைச் சந்தர்ப்பங்களுக் கேற்றவாறு கதைகளில் ஏராளமாய்ப் பாடுவார். ஹாஸ்யம், பக்தி ஆகிய ரஸங்கள் கதைகளில் நிரம்பியிருக்கும். கட்டை கோபாலையங்கார், கும்பகோணம் வீரய்யா பாகவதர் ஆகியோர் இவருக்கு உதவிப் பாடகர்களாயிருந்தது குறிப்பிடத்தக்கது. கும்பகோணம் சுப்பையர் என்பவர் வெகுகாலம் இவர் கதைகளில் மிருதங்கம் வாசித்திருக்கிறார்.

இந்த நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் ஸத்குரு ஸ்ரீ த்யாகராஜஸ்வாமிகளின் ஆராதனோத்ஸவ விஷயமாய்ச் சென்னையில் பிரகடனஞ்செய்து, வேண்டிய தொகைகளையும் வசூல் செய்து, அநேக பாகவதர்களையும், ஸங்கீத வித்துவான்களையும் ஸத்குருவின் கைங்கரிய விஷயத்தில் ஈடுபடச்செய்து, அவர்கள் எல்லோருக்கும் விசேஷமான சிரத்தையை உண்டாக்கிய பொறுப்பு முழுவதும் நரஸிம்ம பாகவதரவர்களைச் சேர்ந்தது. இன்றைக்குத் திருவாதியில் மிகுந்த பிரபலமாய் நடந்துவரும் ஸ்ரீ த்யாகப்ரம்ஹத்தின் உத்ஸவத்திற்கு அந்தக் காலத்தில் விதை விதைத்தவர் நரஸிம்ம பாகவதரவர்கள்தான். கடைசியாகச் சில வருஷங்கள் இவர் கும்பகோணத்திலேயே இருந்து வந்தார். இந்த நூற்றாண்டு ஆரம்பித்த சில வருஷங்களுக்கெல்லாம் காலமானார்.

தஞ்சாவூர் கோவிந்த பாகவதர்

ஆதியில் இவர் கிருஷ்ணபாகவதரவர்களுக்கு மூக்கிய பின் பாடகராய்ச் சில காலம் இருந்தார். காலக்ரமத்தில் தானும் கதை செய்யவேண்டும் என்ற அவா உண்டானபடியால் 1885-ம் வருஷத்தில் இவர் கதை செய்ய ஆரம்பித்தார். கிருஷ்ண பாகவதரவர்களின் பத்ததியையே இவர் முழுவதும் அனுசரித்த போதிலும், அவர் உள்ள வரையில் இவர் கதை சோபிக்கவில்லை. இருந்தாலும் இவருடைய வகுப்பார் வெகுவாய் இவரைப் பாராட்டி ஆதரவளித்தார்கள். ஆகவே கிருஷ்ணபாகவதரவர்களுக்குப் பிற்காலத்தில் சில காலம் இவருடைய கதைகளுக்கு நல்ல செலாவணியிருந்தது. தாய்ப் பாஷையாகிய தெலுங்கில் இவருக்கு நல்ல பாண்டித்யமுண்டு. கேட்போர் மனதில் ஸாகித்யங்கள் நன்கு பதியவேண்டும் என்பதற்காகத் தாளத்துடன் ஒரு முறையும், தாளமில்லாமல் ராகத்தோடு ஒரு முறையும், பிறகு வசனமாய் ஒரு முறையும் சொன்ன பிறகே, ப்ரவசனம் செய்வது இவருடைய ஸம்ப்ரதாயம். இதனால் சாதாரணமாய் இவருடைய கதைகள் முடிய 7, 8 மணி அவகாசமாகும். கிருஷ்ண பாகவதரவர்களின் கதை உருப்படிகளை எப்படியாவது ஸம்பாதிக்க வேணும் என்றெண்ணுபவர்கள் இவருடைய கதைகளைக் கேட்கும்போதே உருப்படிகளை உடனுக்குடன் எழுதிக்கொண்டு விடுவார்கள். இவருடைய கதைகளில் வீரம், பக்தி, ஹாஸ்ய ரஸங்கள் எடுப்பாயிருக்கும். பிற்காலத்தில் இவர் சென்னையில் ராமாயண பாகவதங்களைத் தொடர்ந்து நடத்தியிருக்கிறார். வெங்கடேசகல்யாணம், மீனாக்ஷிகல்யாணம் இவைகளைக் காலக்ஷேப ரூபமாய்ச் செய்திருக்கிறார். ராதா கல்யாண உத்ஸவத்தைத் தன் வீட்டில் கடைசிவரை நடத்திவந்தார். இவருடைய ஸெட்டில் இருந்தவர்களில் முக்கியமாய் தஞ்சாவூர்

நாகராஜ பாகவதர், மாயவரம் ராமஸ்வாமி பாகவதர், திருக்களாவூர் ராமய்யா பாகவதர். சுப்பராம பாகவதர், மிருதங்கம் பாபுராவ், விட்டல்ராவ், சுந்தர் ராவ் ஆகியோரைக் குறிப்பிடலாம். 1921-ம் வருஷத்தில் இவர் காலமானர். திருவாதி ஸ்ரீ த்யாகப்ரம்ஹ உத்ஸவ சின்னக் கட்சியில் சிலகாலம் இவர் ஈடுபட்டிருந்தார்.

பண்டிட் லக்ஷ்மணாசாரியார்

வேத சாஸ்திரங்களில் கரை கண்டவரும், அதற்குச் சமமான ப்ரவசன சக்தியுடையவரும், உபயவேதாந்த விசாரதரும், ஆசுகவியும், விசித்ர சதாவதானியுமாகிய பண்டிட் லக்ஷ்மணாசார் அவர்களுக்கு, தானும் கதை செய்யவேண்டும் என்ற மோகம் உண்டாயிற்று. தனக்கும் ஸங்கீதத்திற்கும் வெகு தூரம் என்பது இவருக்குத் தெரியும். இருந்தாலும் இவர் திருவாதி ஸம்ஸ்கிருத காலேஜில் ப்ரின்ஸிபாலாக இருந்தபோது அங்கு அடிக்கடி தஞ்சாவூர் கிருஷ்ணபாகவதரவர்களின் கதைகளைக் கேட்டுக்கேட்டு இந்தமோகத்தி லீடுபட்டார். 1890ம் வருஷத்தில் திருவாதியில் இவருடைய முதல்கதைநடந்தது. அதற்கு மகா வைத்தியநாதையர் அவர்களும் பட்டணம் சுப்ரமண்ய ஐயர் அவர்களும் வந்திருந்து இவரைக் கௌரவித்தார்கள். ஸங்கீதத்தில் ஸிம்ஹங்களாய் விளங்கும் அந்த இரண்டு வித்துவான்களையும் அருகில் வைத்துக் கொண்டு அன்று தான் கதை செய்ய ஆரம்பித்தது, மன்னிக்க முடியாத பெரிய குற்றந்தான் என்றாலும் தன்னிடம் அந்த மகா வித்வான்களுக்குள்ள அன்பை நம்பியே இதில் தான் ஈடுபட்டதாயும்சொல்லி 'ருக்மிணி கல்யாணம்' என்ற கதையைச் செய்தார். கதையில் கீர்த்தனை பாடவேண்டிய முதல் ஸந்தர்ப்பம் வந்தபோது வலது புறத்தில் வீற்றிருந்த மகா வைத்தியநாதையரவர்களை ஆசார் அவர்கள் பணிவுடன் கேட்டுக்கொண்டதற் கிணங்கி அவரும் அந்தக் கீர்த்தனையைப் பாடினர். அடுத்த இரண்டாவது ஸந்தர்ப்பத்தில் பாடவேண்டிய கீர்த்தனையை இடது பக்கத்தி லிருந்த பட்டணம் சுப்ரமண்ய ஐயரவர்களைப் பாடும்படி கேட்டுக்கொண்டபோது அவரும் அதற்கிணங்கிப் பாடியது குறிப்பிடத்தக்கது. அதன் பிறகு தஞ்சைக்கு வந்து, அங்குக் கதைகளுக்குஅத்யாவசியமான பஞ்சபதி,பதம்,ஓவி,தண்டி ஸாக்கி ஆர்யாபோன்ற வர்ணமெட்டுக்களைத் தயாரித்துக்கொண்டு தஞ்சையிலும் அடுத்த கதையைச் செய்தார். இதற்குத் தஞ்சாவூர் கிருஷ்ணபாகவதரவர்களும் வந்திருந்து கௌரவித்தார். ஆரம்பகாலத்தில் இவருடைய கதைகளுக்குப் பாடியவர் சூலமங்கலம் வைத்யநாத பாகவதரின் தம்பி பஞ்சாபகேசய்யர் என்பவர். இவர் திருவாதி ஸம்ஸ்கிருதப் பள்ளிக்கூடத்தில் அப்போது வாசித்துக்கொண் டிருந்தபடியால் இவரும் சில கதைகளுக்குப் பாடினர். மகா காளிகுடி குருஸாமி பாகவதரும், அவர் சகோதரர் நாராயண சாஸ்திரிகளும் அந்தக் காலத்தில் திருவாதிப் பள்ளிக்கூடத்தில் ஸம்ஸ்கிருதம் வாசித்துகொண்டிருந்தபடியால் இவர்களும் சிலகாலம் பாடினர்கள். தஞ்சை தாஸ் ஸ்வாமிகள் சிலகாலம் ஸெட்டுடன் மிருதங்கம் வாசித்திருக்கிறார். சில வருஷங்களுக்குப் பிறகு பண்டிட் ஆசார் அவர்கள் சென்னைக்கு ஜாகையாகப் போய்விட்டார். அவதாரிகைகளுடன் பேசும் உபந்யாஸ பத்ததியை அனுஸரித்து இவர் கதை செய்த படியால் ப்ரவசனங்கள் ஆணித்தரமாயிருந்தன. குழந்தைகளுக்கும் புரியும் வண்ணம் உயர்ந்த தர்மங்களை பக்குவமாய் எடுத்துரைப்பார். இவருடைய காலக்ஷேபங்களில் ஸங்கீதத்தை விட ப்ரவசனங்களுக்கு அதிகமாக இடம் கொடுத்துச் ஒரு தனி பத்ததியைச் சிருஷ்டித்திருந்தபடியால் இவருடைய ப்ரவசனப்ரவாகத்தில் மூழ்காத பேரேயில்லை யென்று சொல்லலாம். சென்னை சென்ற பிறகு இவருடைய ஸெட்டுடன் இருந்தவர்களில் ஸங்கீத வித்துவான்

இதைக் கேட்ட ஒருவர் "அப்படியானால் கிருஷ்ணன் கையில் இருந்த புல்லாங் குழலும் பட்டுப் போன மூங்கில்தானே? இவருடைய கான விசேஷத்தால் அந்தமூங்கிலும் தளிர்த்து முள்ளும் கிளையுமாய் ஆயிருக்கலாமல்லவா? அந்த நிலைமையில் இவர் எப்படி வாசிக்கமுடியும்?" என்றூர். பாகவதரவர்களும் புன்சிரிப்புடன் "தாங்கள் சொல்வது ஒருவகையில் வாஸ்தவந்தான். ஆனால் ஏற்கனவே நான் சொல்லிவந்தபடி, அவருடைய நாமங்களை உச்சரிக்கும் பிராணிகளுக்கே ஜனன மரணங்கள் கிடையாது என்றால், ஸாக்ஷாத் அவருடைய கரத்திலேயே ஸதாகாலமும் விளங்கிவரும் அந்த வேணுவுக்கு மறு பிறப்பு ஏது? ஆகையால் தாங்கள் எண்ணியது போல் அது தளிர்த்திருக்க ஹேதுவேயில்லை யல்லவா" என்றவுடன் நீண்டகரகோஷம் ஏற்பட்டது.

(10) 'காப்பணமங்கலம் சாமிசாஸ்திரிகள்' என்ற பிரபல பௌராணிகர் ராமாயாணம் சொல்லிக் கொண்டிருந்த ஓர் ஊரில் நடந்த கல்யாணத்தில் கிருஷ்ணபாகவதரவர்கள் கதையை ஏற்பாடு செய்திருந்தார்கள். அன்று ருக்மணிகல்யாணம் கதை. இதைக்கேட்க சாஸ்திரிகளும் வந்திருந்தார். முதன் முதலாக அன்றுதான் பாகவதரவர்கள் கதையை இவர் கேட்க நேர்ந்தது. கதையை வெகு ஸ்வாரஸ்யமாய்க் கேட்டுக்கொண்டுவருகையில் 'ருக்மணி யானவள் தன்னுடைய அபிப்ராயத்தை ஏழு சுலோகங்களால் பகவானுக்கு எழுதி அதை ஒரு லக்கோடாவில் (cover) அடக்கம்செய்து ஒட்டி பிராமணோத் தமன் கையில் கொடுத்தனுப்பினாள்'' என்று பாகவதரவர்கள் சொன்னவுடன் வித்துவானாகிய தான் வந்திருப்பதால், பாகவதர் முக்கியமான இந்த சுலோகங்களை விவரமாய்ச் சொல்லி அர்த்தம் சொல்லாமல், கதையை மழுப்பி விட்டார் என்று தவறுதலாய் எண்ணிக்கொண்டு, "பாகவதர்வாள்! அவள் என்ன எழுதினாள் என்பதை விவரமாய்ச் சொல்லக் கூடாதா?" என்று கேட்டார். சபையில் ஒரு பரபரப்பு உண்டாயிற்று. உடனே பாகவதரவர்கள் "ஒருவருக்கு எழுதின லெட்டரை, கவரில்போட்டு ஒட்டினபிறகு, அதைப் பிரித்துப்பார்ப்பது குற்றம். தவிரவும் இது ஒரு புமானுக்கு ஒரு ஸ்த்ரீயால் எழுதப்பட்ட ரகஸியக்கடிதம். ஆகையால் இப்போது நாம் அதை அலௌகிகமாய் வெளியிடக்கூடாது. விலாஸதாருக்குக் கடிதம் போய்ச்சேர்ந்து, அதை அவர் வாசித்துப் பார்க்கும்போது, தானாகவே ஸமாசாரம் வெளியாகாமலா போய்விடும்! அதற்குள் ஏன் அவசரம்?'' என்று சாதுர்யமாய்ச் சொன்னவுடன் ஒரே கரகோஷம் ஏற்பட்டது. இதைக்கேட்ட சாஸ்திரிகள் அவர்கள் பரம ஆச்சரியத்தை யடைந்தவராய், கதை பூராவும் இருந்து ஷடிசுலோகங்கள் ஒவ்வொன்றையும் பாகவதரவர்கள் ஒவ்வொரு விதத்தில் மிகுந்த அழகாய்ப் பாடி பதவுரை, பொழிப்புரை, கருத்துரை இவைகளையும் விசேஷார்த்தங்களையும் அநேக மேற்கோள்களுடன் சொல்லியதைக் கேட்டுப் பரம ஆனந்தமடைந்தவராய் பாகவதரை வெகுவாய்ப் புகழ்ந்தார். இதே மாதிரி மன்னார்குடியில்நடந்த'ஸீதாகல்யாணம்' என்றகதைக்கு வந்திருந்த பருத்தியூர் கிருஷ்ண சாஸ்திரிகள் என்ற பிரபல பௌராணிகர் கதை முடிந்தவுடன் "பாகவதர்வாள்! நாங்கள் எல்லோரும் ராமாயணத்தை வாசித்து கதையைச் சொல்லுகிறோம். ஆனால் தாங்களோ ஒவ்வொரு சம்பவத்தையும் நாங்கள் நேரில் காண்பது போல் எண்ணி பிரமிக்கும்படி நடித்துக் காட்டி வருகிறீர்கள்'' என்று வெகுவாய்ப் புகழ்ந்தார்.

(11) ஒரு சமயம் பாகவதரவர்களின் ஜமாவைச் சேர்ந்த மருதப்பா என்பவர், தேக அசௌக்கியத்தினால் கூடவரமுடியாமல் போனதால், அவருக்குப் பதிலாக தஞ்சாவூர் துரைசாமிப் பத்தர் என்பவரை அழைத்துச் சென்றார்கள். பத்தருக்கு நல்ல சாரீரமும் கேள்வியும் உண்டு. வெகு நாளாய் பாகவதரவர்களின் கதையில் பாட வேண்டும் என்ற அவாவுமுண்டு. கதை ஆரம்பமாவதற்கு முன்னமேயே பாகவதரவர்கள் பத்தரிடம்

'துரைசாமி! நீ தம்பூராவை ஒழுங்காய் மீட்டிக்கொண்டு அவசியமான இடங்களில் மட்டும், சுருதியுடன் சேர்ந்து கார்வை கொடுத்துக் கொண்டிருந்தால் போதுமானது; பாடஆரம்பித்து விடாதே!" என்று கண்டிப்பாய் எச்சரித்து விட்டார். கதை ஆரம்பித்த சில நிமிஷங்களுக்கெல்லாம், மேல் ஷட்ஜத்தில் கார்வை கொடுக்கவேண்டிய சந்தர்ப்பம் வந்தவுடன் எல்லோரும் சேர்ந்து கார்வை கொடுக்கையில் பத்தருக்கு ஏற்பட்ட ஸங்கோசத்தினுலும், பயத்தினுலும், கொஞ்சம் குறைவாகப் பிடித்துவிட்டார். ஸபையோரும் பத்தரைக் கவனிக்க ஆரம்பித்தார்கள். உடனே பாகவதரவர்கள் "ஓய்! துரைாசமிப் பத்தரே! தங்க வேலைகள் செய்யும் போது தான் சேதாரம் பிடிக்கிறீர் என்றால் சுருதியில் கூடவா சேதாரம் பிடிக்கவேண்டும்?" என்றார். உடனே பலத்த கரகோஷம் ஏற்பட்டது.

12. அன்று 'நந்தனர் சரித்திரம்' கதை. திருப்புன்கூரில், சிவதரிசனத்திற்காக வந்திருக்கும் நந்தனருடைய வேண்டுகோளுக்கிணங்கி, அவருக்குத் தரிசனம் கொடுக்க எண்ணிய பரமன், நந்திகேசுவரரைக் கொஞ்சம் விலகியிருக்கும்படி ஆக்ஞை செய்தும், அதைக்கேளாமல் இருப்பதைக் கண்ட ஈஸ்வரனுக்குக் கோபம்வந்து விடுகிறது. நந்தியைப் பார்த்து "ஒருநாளும் வாராத பக்தன்" என்ற பாட்டை நயமாகவும், பிகுஸுகுவாயும், ஸங்கதிகளுடன் பாடிக்கொண்டு வருகிறார் (பாகவதர்). இந்த இடத்தில் பின்பாட்டுக்காரர்கள் "நந்தன் ஒருநாளும் வாராத பக்தன்" என்று ஒரே மாதிரியாய் முறையாகப் பாடவேண்டியது ஸம்ப்ரதாயம். பாகவதர் மட்டும் ஸங்கதிகளைப் பாடுவது வழக்கம். இந்தச் சந்தர்ப்பத்தில் துரைஸாமிப் பத்தருக்கு 'பக்தன்' என்ற பதம் வ்யக்தமாய்ச் சொல்ல வராததால் "நந்தன் ஒருநாளும் வாராத பத்தன்" என்று சொல்ல ஆரம்பித்து விட்டார். இரண்டு மூன்று முறைக்குமேல் 'பத்தன்' 'பத்தன்' என்று பாகவதரவர்களின் காதில்விழுந்தவுடன், 'ஒருநாளும் வாராத' பக்தன் என்று அந்தப்பதத்தை வியக்தமாய்ப்பாடி, காட்டி அறிந்துக் கொள்ளும்படி ஸமிக்ஞையும் செய்தார். ஆனல் துரைசாமிப்பத்தரோ இதைக் கவனிக்க வில்லையாகையால் பாகவதரவர்களுக்கு சிரிப்புவந்துவிட்டது என்றாலும் அதை வெளிக்காட்டமல் புன்சிரிப்புடன் "நந்தன் ஒருநாளும் வாராத பக்தன்—ஒரு நாளும் வாராத பக்தன் — துரைசாமி பத்தன்! - இவன் ஒரு நாளும் வாராத பக்தன்! துரைசாமி பத்தன்! துரைசாமி பத்தன்!" என்று அவர் பக்கம் கையையும் காட்டி, பாட்டோடு பாட்டாய்ப் பாடி சங்கதிகளையும் போட்டவுடன் இந்தப்பத்தர் இன்றுதான் கதைக்குப் புதிதாய் வந்திருக்கிறார் போலிருக்கிறது என்பதை ஸபையில் உள்ளவர்கள் எல்லோரும் தெரிந்து கொண்டவர்களாய் விடாது பல நிமிஷங்கள் கரகோஷம் செய்தார்கள். இம்மாதிரி கணக்கற்ற அநேக ரஸமான ஸம்பவங்கள் உண்டு.

முடிவுரை

கிருஷ்ண பாகவதரவர்களின் முக்கிய சிஷ்யரும் எனது பிதாவுமாகிய காலஞ்சென்ற தஞ்சாவூர் பஞ்சாபகேச பாகவதரவர்கள், தன்னுடைய குருநாதனை நினைந்து மெய்மறந்து அடிக்கடி சொல்லும் விவரங்களிலிருந்தும், பாகவதரவர்களின் கதைகளை நேரில் கேட்டானந்திக்கும் பரமரஸிகர்களான பெரியோர்களிடமிருந்தும், நான் அறிந்த சிலவற்றைத் தொகுத்து, கிருஷ்ண பாகவதரவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை ஒருவாறு எழுதினேன். அந்தப் பெரியோர்களில் முக்கியமாய்க் காலஞ்சென்ற கீர்த்தனசார்யார் C. R. ஸ்ரீனிவாச அய்யங்கார் அவர்களையும் C. S. ராமானுஜஞ் செட்டியார் அவர்களையும், இப்போது சென்னையிலிருந்து வரும்ஸ்ரீமதி C. ஸரஸ்வதி பாய் அவர்களின் குரு T. B. கிருஷ்ணசார் அவர்களையும்இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். அவர்களுக்கு என்னுடைய நன்றி என்றும் உரித்தானது.

9-மணி வரையில் வெகு விஸ்தாரமாகவும் அழகாகவும் சொல்லி முடித்தார். இவருடைய கதையில் அபாரமான பிரமையை யடைந்த திவான் மாதவராவ் அவர்கள், அந்த வருஷம் ஆடிமாதத்தில் திருக்குற்றலம் வந்து, தன்னுடன் ஒரு மாதமாவது தங்கவேண்டும் என்று விரும்பியபடியால் அந்தப்படியே பாகவதரவர்கள் அங்கு போய் ஒரு மாதம் இருந்து சில கதைகளைச் செய்தார். அங்கு வந்திருந்த இதர ஸமஸ்தான திவான்களும் பாகவதரவர்களின் கதைகளைக் கேட்டானந்திக்கும்படி நேர்ந்தபடியால், அதுமுதல் மற்ற ஸமஸ்தானங்களிலிருந்தும் இவருக்கு வருஷா வருஷம் அழைப்புகள் கிடைத்தன.

(7) புதுக்கோட்டை மஹாராஜாவாயிருந்த ராமச்சந்திரத் தொண்டமான் பரமரஸிகர். கிருஷ்ண பாகவதரவர்களின் கதைகளில் மட்டற்ற அபிமானம். விஷ்ணுபாவா அவர்களையும் கிருஷ்ண பாகவதரவர்களையும் சேர்ந்தாற்போல் ஒரு சமயம் வரவழைத்து மாதக்கணக்கில் அவர்கள் இருவரையும் ஆதரித்து, ஒருநாள் பாவா அவர்களின் கதையையும் மறுநாள் பாகவதரவர்களின் கதையையுமாக மாறி மாறிக் கேட்டானந்தித்து, கடைசியில் இரண்டு பேருக்கும் விசேஷமான ஸம்மானங்களையும் சால்வை தோடா, ஆகிய வெகுமானங்களையும் செய்து கௌரவித்தார். இந்த ஸமயம் நடந்த ஒரு ரஸமான ஸம்பவம் குறிப்பிடத்தக்கது. அரண்மனையில் அநேகங் கதைகளைச் செய்த பாகவதரவர்கள், சில காரணங்களை யொட்டி, "துருவ சரித்ரம்" என்ற கதையைச் செய்யவேயில்லை. ஆனால் ஒருநாள் அரண்மனை ஸர்வாதிகாரியின் வீட்டில் நடந்த ஒரு விசேஷத்தை யொட்டிக் காலக்ஷேபம் செய்ய நேர்ந்தபோது 'துருவ சரித்திரம்' என்ற கதையைச் செய்தார். இதைக்கேட்ட ரஸிகர்கள் மஹாராஜா அவர்களிடம் பிரமாதமாய் வர்ணிக்க ஆரம்பித்து விட்டபடியால், மறுநாள் பாகவதரைக் கண்டவுடனேயே மஹாராஜா அவர்கள் "நான் அந்த துருவசரித்திரத்தைக் கேட்கக்கூடாதா?" என்று கேட்க ஆரம்பித்துவிட்டார். இதைக்கேட்ட பாகவதரவர்கள் "அந்தக் கதை தங்களைப் போலொத்தவர்கள் கேட்டனுபவிக்கக் கூடியதல்ல!" என்றார். பரம ஆச்சரியத்தை யடைந்த மஹாராஜா அவர்கள், "இவ்வளவு ஜனங்கள் அதை ஆமோதித்து அனுபவித்திருக்கையில், நான்மட்டும் அதற்கு விலக்கா?" என்றார். "அதில் உள்ள சில விஷயங்கள் தங்களுக்கு ஒவ்வாததா யிருக்கலாம். தர்பாரில் தாங்கள் பிரதான புருஷனாய் அமர்ந்து கதை கேட்கையில், முக்கியமாய்த் தங்களுடைய மனப்பான்மையையும் போக்கையும் அனுஸரித்தே நான் கதை செய்யவேண்டியது அவசியம். ஆனால் இந்தத் துருவசரித்திரத்தில் உள்ள சில பாகங்களை நான் வழக்கம்போல் ஆர்வத்துடன் ஸ்வாரஸ்யமாய்ச் சொல்ல ஆரம்பித்து விட்டால் உங்களுடைய மனப்பான்மைக்கு விரோதமா யிருக்கலாம். இதை உத்தேசித்து, நான் கதையின் அமைப்பையும் சொல்லும் ஆர்வத்தையும் மாற்றிக்கொள்ள நேரும். இம்மாதிரியான கட்டுப்பாடுகளுக்கு அடங்கிக் கதை செய்யும் வழக்கம் எனக்கில்லை. இதனால்தான் இந்தச் சரித்திரத்தை நான் இதுகாறும் அரண்மனையில் செய்யவில்லை. நான் வழக்கம்போல் அந்தக் கதையைச் செய்யலாம் என்று உங்களுக்கு நிராக்ஷேபணையாய்த் தோன்றினால் நான் காத்துக் கொண்டிருக்கிறேன்" என்று பாகவதரவர்கள் விநயமாய்ச் சொன்னார்.

இதைக் கேட்ட மஹாராஜா அவர்களும் மந்தஹாஸத்துடன் "இது தானா பிரமாதம்! எப்படியிருந்த போதிலும் நான் தங்களுடைய கதையைக் கேட்டானந்திக்கத் தயாராயிருக்கிறேன். எனக்காக நீங்கள் கொஞ்சமும் தாக்ஷண்யப்பட வேண்டாம்! எந்தப் பாகத்தையும் மாற்றவோ குறைக்கவோ வேண்டாம்!..." என்று உத்தரவு கொடுத்துவிட்டார். மறுநாள் கதையில் உத்தானபாத மகராஜாவைப் பற்றியும், இரண்டு மனைவிகளை நிர்வகிப்பதில் அவருக்கு ஏற்பட்டிருந்த கஷ்டங்களைப்பற்றியும் பொதுவாகவே இரண்டு

பெண்டாட்டிக்காரனுடைய கஷ்டங்களை வர்ணிக்கும் சில உபகதைகளையும், இந்தக் கஷ்டங்களை வெகு அழகாய்ச் சித்திரிக்கும் ஒரு தெலுங்குக்கீர்த்தனையைப் பாடியும் பூர்ண ரஸானுபாவத்துடன் கதையைச் சொல்லிக் கொண்டே வந்தார். ஏற்கனவே எவ்வளவோ முன்னெச்சரிக்கை செய்திருந்தும், ஆரம்பத்தில் ஸ்வாரஸ்யமாய்க் கதையை அனுபவித்துவந்த மகாராஜா அவர்களின் முகத்தில் வர வர ஸந்தோஷம் குறைய ஆரம்பித்தது. மற்றவர்களைப் போல் பூர்ணமான ஆர்வத்துடன் அந்த பாகங்களை அனுபவிக்க முடியவில்லை. ஏனென்றால் மகாராஜாவுக்கும் இரண்டு பத்தினிகள் இருந்ததுதான் காரணம். இந்த சமயம் ஏற்பட்ட மனத்தடுமாற்றத்தால் பக்தி வெள்ளம் பெருகும் ஷை கதையின் இதர பாகங்களைக் கூட அவரால் உள்ளபடி ரஸிக்க முடியவில்லை.

கதை முடிந்தவுடன் தனிமையில் பாகவதரவர்களைப் பார்த்து "இந்தக் கதையை இதுவரையில் தாங்கள் இவ்விடம் செய்யாமலிருந்துவந்த மர்மத்தையும், தங்களுடைய உசிதானுசித புத்தியையும் நான் மிகவும் பாராட்டுகின்றேன். மகா புத்திமானாகிய தாங்கள், எவ்வளவோ நாஸூக்காய் தடுத்துச் சொல்லியும் நான் அதைக் கோளாமல் உங்களைக் கட்டாயாப்படுத்தினேன். வன்மைவாய்ந்த தங்களுடைய ப்ரவசனப்ரவாகத்தில் எனக்கு ஏற்பட்ட தோல்விதான் முடிவாக நான் கண்டபலன்" என்று மனமாரப் புகழ்ந்தார் ரஸிக சிகாமணியாகிய மகாராஜா. சமயம், சந்தர்ப்பம், சபையின் தராதரம், இவைகளை யறிந்து அவர் கதை செய்தபடியால் மகாகௌரவமுள்ள கதையாய் அது விளங்கிற்று.

(8) கதைகளில், யாராவது எதிர்பாராத நிலைமையில், ஏதாவது கேள்விகளைக் கேட்டு ஆக்ஷேபித்த போதிலும், அதற்கு மிகவும் சாமர்த்தியமாகவும், அழகாகவும், சமயோசிதமாயும் பதில் சொல்வதில் இவர் வெகு சமர்த்தர் என்பதை விளக்க, ஒன்றிரண்டு சம்பவங்களை எழுத விரும்புகின்றேன். ஒரு சமயம் "ஸீதா கல்யாண" காலக்ஷேபம் செய்து வருகையில் நாராயண சாமி அப்பா அவர்கள் மிருதங்கம் வாசிக்கிறார். பரசுராமனுடைய வருகையைப் பற்றி வர்ணிக்கையில், "பரசுராமன் என்றாலே எல்லா ராஜாக்களுக்கும் ஸிம்ஹ ஸ்வப்பனம்" என்றார். உடனே நாராயணசாமி அப்பா அவர்கள் "ஸிம்ஹ ஸ்வப்பனம் என்றால்என்ன?" என்றுகேட்கவும் "யானைக்கு ஸிம்ஹம் ஜன்ம வைரி. அவைகள் ஸிம்ஹத்தை நேரில்கண்டாலும் அல்லது ஸ்வப்பனத்தில் கண்டாலும் உடனே இறந்துவிடும். அவ்வளவு பயம்!" என்றார் பாகவதர். "நேரில்பார்த்தால் பயந்து சாவது சகஜம்தான். ஆனால் நேரில் பாராமல் இருக்கையிலேயே யானையானது ஸிம்ஹத்தை ஸ்வப்பனத்தில் எப்படிக் காண முடியும்? ஒரு முறையாவது நேரில் பார்த்திருந்தால்தானே ஸ்வப்பனத்திலாவது காணமுடியும். நேரில் பார்த்தவுடனேயே பயந்து சாகக்கூடிய யானைக்கு மறுபடியும் ஸ்வப்பனம் ஏற்படவே ஹேதுவில்லையே! ஆகவே நீங்கள் சொல்வது முரணாயிருக்கிறது" என்றார் நாராயணசாமி அப்பா. இதைக் கேட்ட பாகவதரவர்கள் "யானையானது ஸிம்மத்தை நேரில் பாராத போதிலும், சிம்மம் என்ற ஜந்து நம்முடைய ஜன்ம வைரி என்றும் அது மகா பயங்கர ஸ்வரூபமுள்ளது என்றும் அடிக்கடி எண்ணி எண்ணி, தன் மனதில் ஸிம்மத்திற்கு ஒரு ஸ்வரூபத்தைக் கற்பனை செய்து வைத்திருக்கும். அந்த பயங்கரமான கற்பனை ரூபத்தை எப்போதாவது ஸ்வப்பனத்தில் கண்டால்கூட யானை இறந்துவிடும்" என்று சாதுர்யமாயும் சமயோசிதமாயும் தெரிவித்தார். நாராயணசாமி அப்பா அவர்களும் மற்றவர்களும் "சபாஷ்" என்று கொண்டாடினார்கள்.

9. மற்றொரு சமயம் கிருஷ்ண பகவானுடைய வேணுகானத்தைப் பற்றி வர்ணிக்கையில் "அந்த வேணுகானத்தில், பட்ட மரமும் தளிர்த்துப் பாலாய்ச் சொரியும்" என்றார்.

முதல் பாகவதரவர்களுக்கு வேண்டிய ஜவ்வாது, புனுகு, அரகஜா, ஊதுவத்தி வில்லைகள் போன்ற எல்லா வாசனை சாமான்களையும் பாகவதரவர்களின் கடைசிக்காலம் வரை இலவசமாய்க் கொடுத்து வந்தார்.

தொண்டை மண்டலம் ஸபையில் ஒரு சமயம் 'கிருஷ்ண ஜனனம்' என்ற கதையைக் கேட்டுக் கொண்டே வந்த ஆந்திரப் பிரபு ஒருவர், மெய் மறந்து கதையில் ஈடுபட்டு விட்டார். தேவகியின் குழைந்தைகளைக் கம்ஸன் வெட்டும் பாகத்தை பாகவதர் தத்ரூபமாய்ச்சொல்லிவருகிறார். "முதல்குழந்தையைக் கம்ஸன் தனது இடது கையால் அதன் இரண்டு கால்களையும் பிடித்துத் தலைகீழாய்த் தூக்கினான்! 'கர கர' வென்று சுழற்றி ஆகாசத்தில் உயரத் தூக்கி எறிந்தான்!! அது அலறிக் கொண்டு பூமியை நோக்கி வருகையில் வலது கையில் உள்ள வாளைக் குறுக்கே நீட்டினான். குழந்தை இரண்டு துண்டுகளாய் பூமியில் விழுந்தது!" என்று தத்ரூபமாய் ஏற்றபாவங்களுடன் பாகவதர் சொல்லி வருகையில் மெய் மறந்துக் கதையில் மூழ்கியிருந்த ஆந்திரப் பிரபு பாகவதரை ஸாக்ஷாத் கம்ஸனாகவே எண்ணி விட்டார்.

இதற்குள் பாகவதரவர்கள் "கொண்டுவா! இரண்டாவது குழந்தையை!" என்று கம்ஸனைப் போல கர்ஜித்தவுடன் ஆந்திரப் பிரபு உடனே எழுந்தார். பாகவதரிடம் ஓடி அவரது வலது கையைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு கண்களில் நீர் தாரை தாரையாய்ப் பெருக, தெலுங்கில் "வேண்டாம்! வேண்டாம்!! இந்தச் சிசுஹத்தி வேண்டாம்" என்று கெஞ்சினார். நிலைமையை உணர்ந்த பாகவதரவர்களும் "ஸரி! வேண்டாம்! இனி நான் வெட்டவில்லை" என்று தெலுங்கில் சொல்லி ஸமாதானப் படுத்தி உட்கார வைத்தார். பக்கத்தில் உள்ளவர்கள் அவரை மெதுவாக வெளியில் அழைத்துக் கொண்டு போய் விட்டார்கள்.

வேலூரில் 'திரௌபதி மான ஸம்ரக்ஷணம்' என்ற கதையை பாகவதரவர்கள் செய்து கொண்டிருக்கையில் அங்கு ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்திருந்தார். கதையில் மெய் மறந்துபோய் ஈடுபட்டு விட்டதால் "துரியோதனன் ஆக்ஞையை நிறைவேற்ற எண்ணின துச்சாஸனன் எழுந்திருந்தான்! திரௌபதியை யணுகினான்! அவளுடைய துகிலை உரிய எண்ணி வஸ்திரத்தில் கையைப் போட்டு இழுக்கவும் ஆரம்பித்து விட்டான்" என்று பாகவதர் சொன்னவுடன் பாகவதரைத் துச்சாஸனனாகவே எண்ணிவிட்டார் அந்தப் போலீஸ் அதிகாரி. கண்களில் தீப்பொறி பறக்க எழுந்து நின்று தன்னுடைய அதிகாரதோரணையைக் காட்டி "டேய் 315! உடனே இவனை அரஸ்ட் செய்! கொண்டுபோ ஸ்டேஷனுக்கு!" என்று கோபம் பொங்கக் கத்தினார். 'பக்கத்திலிருந்த அவருடைய ஸ்நேகிதர்கள் அவரை மெதுவாய் வெளியே அழைத்துப்போய் விட்டார்கள்.

இம்மாதிரி எவ்வளவோ ஸம்பவங்கள் கதைகளில் நேர்ந்திருக்கின்றன. பொதுவாகவே சோகரஸப்ரதானமான பாகங்களை பாகவதர் சொல்ல ஆரம்பித்து விட்டால், சிலர் தாரை தாரையாய்க் கண்ணீர்விட்டு அழுவார்கள். சிலர் மெய் மறந்து தேம்பித் தேம்பி யழுவார்கள். ஏனென்றால் கதையில் வரும் ஸம்பவங்கள் ஒவ்வொன்றும் தத்ரூபமாய் நேரில் நடப்பதாகவே எண்ணும் படியாயிருக்குமாகையால், அவர்கள் மெய்மறந்து விடுவது இயற்கையே. உதாரணமாக "லக்ஷ்மண சக்தி" என்ற கதையில் லக்ஷ்மணன் யுத்த காலத்தில் சக்தி என்ற ஆயுதத்தினால் அடிபட்டு மூர்ச்சித்து இருக்கையில், ராமன் பிரலாபிக்கும் விவரங்களையும் "வத்ஸலா கல்யாணம்" என்றகதையில் அபிமன்யுவானவன் கடோத்கஜனால் அடிபட்டு மூர்ச்சித்து விழுந்த ஸமயம் சுபத்திரையானவள் துக்கப்படும் பாகங்களையும், பாகவதரவர்கள் சொல்லி வரும்போது, அவருடைய ஸமீபத்தில் அந்த லக்ஷ்மணனும், அபிமன்யுவும் மூர்ச்சித்துக் கிடப்பதாகவும், பாகவதரையே ராமனாகவும், சுபத்திரையாகவும்

அந்த ஸபையையே யுத்தகளமாகவும் எண்ணி சற்று தூரத்தில் உட்கார்ந்திருக்கும் ஜனங்கள் மெய்மறந்து போய் எழுந்து எட்டிப்பார்ப்பார்கள். பக்தி வெள்ளம் பெருகும் நந்தன் சரித்திரத்தை பாகவதரவர்கள் சொல்ல ஆரம்பித்துவிட்டால், ஆஹா! அதைக் கேட்கும் ஜனங்கள் சேரியையும் திருப்புன்கூரையும், பிராம்ஹணேத்தமன் வீட்டையும், வயல் வெளிகளையும், பூஜைநடக்கும் திடலையும், விளைந்த நிலங்களையும், சிதம்பர க்ஷேத்திரத்தையும், தாங்கள் அவ்வப்போது நேரில் பார்ப்பதாகவே எண்ணுவதுடன், பாகவதரவர்கள் அவ்வப்போது பேசுகையில் அவரை நந்தனாராகவும், மற்ற புலையர்களாகவும், திருப்புன்கூர் ஈசனாகவும், பெரிய கிழவனாகவும், பிராம்ஹணேத்தமனாகவும் சிதம்பர தீக்ஷிதர்களாகவும் மாறி மாறி எண்ணி பிரமித்துவிடுவார்கள். வாஸ்தவத்தில் 40 வேலி நஞ்சை நிலங்களுக்கு இவர் மிராசுதாராயிருந்தாலன்றி இவ்வளவு ஸ்வானுபவத்துடன் பேசமுடியாது என்றெண்ணியவர்களும் உண்டு. தேகத்தை ஒடுக்கிக்கொண்டு அடக்க ஒடுக்கமாய் மிகுந்தவணக்கத்துடன் இவர் நந்தனாராயிருந்து பேசுகையில் தாங்கள் நந்தனாரை நேரில் பார்ப்பது போலவே எண்ணுவார்கள் 'விரித்த செஞ்சடையாட' 'நடனமாடினார்' என்ற உருப்படிகளை அவர் பாடி அபிநயம் பிடிக்கையில் நேரில் தாங்கள் ஆனந்த தாண்டவ தரிசனம் செய்வதாய் எண்ணி மகிழ்வார்கள். கோபால கிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரப் பாடல்கள், உன்னத நிலைமையை யடைந்ததற்கு முக்கிய காரணமாயிருந்தவர் கிருஷ்ணபாகவதர் தான் என்பதை எவரும் மறுக்க இயலாது. சேர்ந்தாற்போல் 100 தடவை அவர் நந்தன் சரித்திரத்தைக் காலக்ஷேபமாய்ச் செய்தாலும், ஒரு தடவை கூடவிடாமலும் கொஞ்சமேனும் அலுப்பில்லாமலும் ஜனங்கள் கேட்கத் தயாராயிருந்தார்கள். அவரால் அமைக்கப்பட்ட நந்தன் சரித்திரக் கீர்த்தனை வர்ணமெட்டுகள் நாளதுவரை பொது ஜனங்களால் போற்றப்பட்டு வருவதே அதற்குப் போதிய சான்றாகும்.

தஞ்சாவூரில் பிரபல வக்கீலாயிருந்து வந்த கல்யாண ஸுந்தரமய்யர் பரம ரஸிகர். பாகவதரவர்களின் கதைகளில் மட்டற்ற அபிமானமுள்ளவர். அவருடைய வீட்டில் எந்த விசேஷங்கள் நடந்தாலும் பிரபல ஸங்கீத வித்வான்களின் ஸங்கீதக் கச்சேரிகளும் பாகவதரவர்களின் கதைகளும் நடக்கும். ஒரு ஸமயம் நடந்த கல்யாணத்திற்கு திவான் மாதவராவ் அவர்கள் வந்திருந்தார். அன்று மாலை 6-மணிக்கு பாகவதரவர்களின் கதை ஏற்பாடாகி இருந்தது. அதைக் கேட்டுவிட்டுத்தான் போகவேண்டும் என்று வக்கீல் வற்புறுத்தினர். ஆனல் திவான் அவர்களோ அன்று இரவு 8-மணி வண்டியில் புறப்பட வேணுமாகையால், கதையை 7½ மணிக்குள் முடிப்பதானல், தான் இருந்து கேட்டு விட்டுப்போவதாய்ச் சொன்னர். இந்தக்கதையை திவான் அவர்கள் எப்படியாவது கேட்கும்படி செய்யவேண்டும் என்று நிச்சயித்த வக்கீல் அவர்கள் பாகவதரவர்களிடம் விவரத்தைத் தெரிவித்து 7½ மணிக்குள் கதையை முடித்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அன்று ருக்மணி கல்யாணம் கதை. அதைச் சுருக்கமாகவும் அழகாகவும் சொல்லிவருகிறார். வழக்கம்போல் கேட்கும் ஜனங்களுக்கு அவர் எந்த பாகத்தைச் சுருக்கினர் என்ற விவரம் தெரியவில்லை. ஆனல் 7-மணிக்குள்ளாக, சுமார் அரையே அரைக்கால் வாசிக் கதை ஆகிவிட்டது. திவான் அவர்களும் மெய்மறந்து கேட்டு வருகையில், அவருக்கு பாகவதரை ஒரு பரீக்ஷை செய்யவேண்டும் என்று தோன்றிற்று. உடனே "பாகவதர்வாள்! தங்கள் கதை நிரம்ப ஸ்வாரஸ்யமா யிருப்பதால் அதை விஸ்தாரமாகக் கேட்க விரும்புகிறேன்! நான் இன்று ஊருக்குப் போகவில்லை. ஆகையால் பாக்கிக் கதையைத் தாங்கள் உசிதம்போல் விஸ்தாரமாய்ச் செய்யலாம்" என்று சொன்னவுடன் பாகவதரவர்களும் அதை வணக்கமாய் ஆமோதித்து, பாக்கிக் கதையை

பாலக்காடு அனந்தராம பாகவதர், பாலக்காடு அனந்தகிருஷ்ண பாகவதர் லால்குடி ராமஸ்வாமி பாகவதர், திருவானைக்காவல் ராமலிங்கையர் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

தியாக ப்ரம்ஹத்தின் கீர்த்தனைகள் உபநிஷத்துகளுக்குச் சமானம் என்பதை கதைகளில் நிரூபித்து அவைகளைத் "தியாகோபநிஷத்" என்றே அழைப்பார். ஸ்ரீ த்யாகப்ரம்ஹத்தின் உத்ஸவத்தை திருவாதியில் நடத்திவந்த இரண்டு கட்சிகளில் 'சின்னக்கட்சி' யென்றழைக்கப்பட்ட "ஸ்ரீ த்யாகராஜ பரப்ரம்ஹ வைபவ ப்ரகாச ஸபா" வின் தலைவர் ஸ்தானத்தை வகித்து தன்னுடைய கடைசிகாலம் வரை உத்ஸவத்தை வெகு சிறப்பாக நடத்தினர். 1919 ம் வருஷத்தில் பரமபதமடைந்தார்.

சூலமங்கலம் வைத்யநாத பாகவதர்

இவர் ஆதியில் (Inspecting School Master) என்ற உத்யோகத்தைக் கல்வியிலாகாவில் வகித்துவந்தார். கிருஷ்ண பாகவதரவர்களின் கதைகளை அடிக்கடி கேட்டுத்தானும் அம்மாதிரியே கதை செய்யவேண்டும் என்ற அவாவினுல் தன் உத்யோகத்தை ராஜீனமா செய்துவிட்டு காலக்ஷேபத்துறையில் ஈடுபட்டார். இவருடைய தம்பி பஞ்சாபகேசய்யர் முதலில் பண்டிட் லக்ஷ்மணசார் அவர்களின் கதைகளில் சிலகாலமும் பின்னிட்டுக் கும்பகோணம் நடேச பாகவதருக்குச் சிலகாலமும் பாடி அனுபவம் பெற்றிருந்தபடியால் தம்பியைத் தனக்கு ஸகாயமாய் வைத்துக்கொண்டு கிருஷ்ண பாகவதரவர்களின் காலத்திலேயே அதாவது சுமார் 1895 ல் கதை செய்ய ஆரம்பித்தார். கிருஷ்ண பாகவதரவர்களின் கதைகளில் இவருக்கு அளவில்லாத மோகமும் அவரிடம் விசேஷ பக்தியும் இருந்தபடியால் அவருடைய பத்ததியையே அனுசரித்துக் கதை செய்து வந்தார். தவிர 63 நாயன்மார்களின் திவ்ய சரித்திரங்களைக் காலக்ஷேப முறையில் தயாரித்துக் கதை செய்து வந்தார். இதற்குப் பேருதவியாயிருந்து பாகவதரவர்களுக்கு ஊக்கமளித்தவர் வேணுகானம் சரபசாஸ்திரிகள். மஹா மேதாவியான அவருக்கு ஸம்ஸ்கிருதம், தெலுங்கு, மகாராஷ்டிரம் ஆகிய பாஷைகளில் நல்ல பாண்டித்யமிருந்தபடியால், வேண்டிய ஸாஹித்யங்களையும், வர்ண மெட்டுகளையும் சிட்டாஸ்வரங்களையும் அவரே அமைத்துக் கொடுத்தபடியால் இவருடைய கதைகள் தனியான சோபையுடன் விளங்கின. மிருதங்கம் நாராயண ஸாமி அப்பா அவர்கள் தன் வீட்டு உத்ஸவத்தில் இவருடைய கதையைக் கேட்டு அதில் மிகவும் ஈடுபட்டு பரமப்ரீதியை வகித்து வந்ததுடன் பாகவதரவர்களின் வீட்டில் கல்யாண உத்ஸவத்தில் இவருடைய கதைக்கு வாசித்தார். அப்போது நடக்கும் ராதா அங்கு வந்திருந்த வேணுகானம் சரபசாஸ்திரிகளும் அந்தக் கதையில் புல்லாங்குழல் வாசித்து பாகவதரைக் கௌரவித்தார்.

பொதுவாய் இவருடைய கதைகளில் ஹாஸ்யம், பக்தி, வீரம் ஆகிய ரஸங்கள் பரிபூர்ணமாயிருக்கும். தியாகப்ரம்ஹத்தின் கீர்த்தனைகளையும், தேவாரம், திருவாசகம் ஆகிய பண்களையும் முறைப்படி இவர்கள் சேர்ந்து பாடுவது ரமணீயமாக இருக்கும். 63 நாயன்மார்களின் சரித்திரங்களை தொடர்ச்சியாக இவர் அநேக முறைசெய்து பெரிதும் சம்மானிக்கப் பட்டிருக்கிறார். இவருடைய ஸெட்டில் நிரந்தரமாய் இவருடைய தம்பியும், காரைக்குடி பெரிய அய்யா, வைத்யனுதையர், சீனிவாஸய்யர், ராதாகிருஷ்ணையர் ஆகியோரும் பாடியிருக்கிறார்கள். மிருதங்கம் துக்காராம், ராமதாஸ் ஸ்வாமிகள், மைலாட்டூர் கிருஷ்ணையர், காரைக்குடி சின்னய்யா, தஞ்சாவூர் பக்கிரி, மைலாட்டூர் ஸாமி அய்யர், தஞ்சாவூர் வைத்யனுதையர், மாயவரம் ராமகிருஷ்ணையர், மிருதங்கம் செல்லப்பய்யர் ஆகியோர் மிருதங்கம் வாசித்திருக்கிறார்கள். "ஸ்ரீ த்யாகராஜ பரப்ரம்ஹ வைபவ ப்ரகாச ஸபை" யாகிற சின்

னக் கட்சியில் சிலகாலம் காரியதரிசியாகவும் அநேக வருஷங்கள் ஸர்வாதி காரியாயுமிருந்து ஸ்ரீ த்யாகப்ரம்ஹ ஆராதனோத்ஸவத்தை வெகு விமரிசை யாய் நடத்தினர். 1940-ம் வருஷத்தில் கக்ஷிகள் ஒற்றுமைப்பட்ட சமயம் வந்திருந்து கண்டு களித்தார். 1943-ம் வருஷத்தில் துரீயாச்ரமத்தைப் பெற்று சித்தியடைந்தார். இவருடைய ஞாபகார்த்தமாய் சூலமங்கலத்தில் ஒரு குரு குலம் நிறுவி அந்தக் கட்டிடத்திலேயே வெகுகாலமாய் பாகவதர வர்களால் நடத்தப்பட்டுவந்த ஸ்ரீ ராதா கல்யாண உத்ஸவத்தை நடத்திவரத் தீர்மானித்து அவைகளுக்கு வேண்டிய நிதியைத் திரட்டி கட்டிட வேலைகளை நடத்திக்கொண்டுவரும் பாகவதரவர்களின் குமார்ர்களின் இடைவிடா ஊக்கம் பாராட்டத்தக்கது. ஸ்ரீ த்யாகப்ரம்ஹத்தின் கைங்கரியத்தில் சுமார் 25 வருஷ காலம் ஈடுபட்டு சத்குருவிடம் விசேஷ பக்தியை வகித்த பாகவதரவர்களின் கடைசி அவா நிறைவேறி துரீயாச்ரமம் பெற்ற வைபவம் இங்கு குறிப்பிடத் தக்கது.

திருப்பழனம் பஞ்சாபகேச சாஸ்திரிகள்

இவர் வசீகரமான தோற்றமும் தேகக் கட்டும் வாய்ந்தவர். ஆதியில் இவர் திருவிசை நல்லூரில் ஸம்ஸ்கிருதம் வாசித்து பௌராணிகராய் சில காலம் இருந்தார். அங்கு பிரதி வருஷத்திலும் ஐயர்வாள் உத்ஸவத்தில் அமாவாஸையன்று நடந்துவந்த கிருஷ்ண பாகவதரவர்களின் காலக்ஷேபங் களில் மிகவும் ஈடுபட்டுத் தானும் அம்மாதிரி கதை செய்ய 1898 வருஷத்தில் ஆரம்பித்தார். இவர் முதலில் ஒன்றிரண்டு நிரூபணங்களை கிருஷ்ண பாக வதரவர்களிடம் எழுதிப் பாடம் பண்ணினர். ஆனல் அவைகளை கிருஷ்ண பாகவதரவர்கள் பாடிநிர்வகிப்பதுபோல் தன்னல் முடியாது என்பதை வெகு சீக்கிரத்தில் உணர்ந்து, தனக்கென ஒரு பத்ததியை ஏற்படுத்திக் கொண் டார். ஸம்ஸ்கிருதத்திலும் ப்ரவசனம் செய்யும் விஷயத்திலும் இவருக் கிருந்த விசேஷமான யோக்யதையே பிற்காலத்தில் இவரைப் பிரபலப்படுத் தியது.

அந்தக் காலத்தில் நவீனமாகவிருந்த பாலீவர்ண மெட்டுங்களைக் கதை களில் அமைத்தார். தன் அபிப்ராயங்களுக்கேற்றவாறு ஸாஹித்தியங்களை யும் செய்து நல்ல வர்ண மெட்டுக்களில் சிட்டாஸ்வரங்களுடன் அமைத் தார். திவ்யமான சாரீரமுள்ள நல்ல பாடகர்களையும், நல்ல மிருதங்கத் தையும் ஏற்பாடு செய்துகொண்டார். பாடும் விஷயத்தில் அதிக சிரமத்தை வகிக்காமல் ஆங்காங்கு மெருகுடன் பாடிவந்தார். வசீகரமான தோற்றம், நல்ல முகவெட்டு, இணையற்ற ப்ரவசனம், அற்புதமான ஸெட்டு, இவைகளினல் எல்லோரையும் கவர்ந்தார். கதைகளில் ஹாஸ்யம், பக்தி, வீரம், சோகம் ஆகிய ரஸங்கள் அலைமோதின. கதை செய்வோருக்கு ஸம்ஸ் கிருத ஞானம் அத்யாவசியம் என்பதை நிலைநிறுத்தி ராமாயணக் கதைகளைத் தொடர்ச்சியாக அநேக இடங்களில் செய்து கீர்த்திபெற்றார். "சாஸ்திரிகளின் பாணி" என்ற ஒரு தனி பத்ததியைச் சிருஷ்டித்தார். கும்பகோணத்தில் தன் கிருஹத்தில் ராமநவமி உத்ஸவத்தை வெகு சிறப்பாய் நடத்திவந்தார்.

வாழ்க்கையில் நல்ல சுகி. ஸ்வபாவத்தில் நல்ல ஸரஸி. இவர் ஸெட்டு டன் இருந்தவர்களில் நல்லூர் விசுவனுத பாகவதர், கும்பகோணம் வீரய்யா பாகவதர், குஞ்சு பாகவதர், பாலக்காடு அனந்தகிருஷ்ண பாகவதர், மாதிரி மங்கலம் நடேசய்யர், ஆகியோரையும். மிருதங்கம் வாசித்தவர்களில் அழக நம்பிப் பிள்ளை, தஞ்சாவூர் பக்கிரி, தஞ்சாவூர் பாப்புராவ், கோதண்டராமய்யர், முத்து பாகவதர், தஞ்சாவூர் ராம்தாஸ் ராவ், மாங்குடி துரைராஜய்யர் ஆகி யோரைக் குறிப்பிடலாம்.

திருவாதி ஸ்ரீ த்யாகப்ரம்ஹ உத்ஸவப் பெரிய கக்ஷியில் இவர் சுமார் 15 வருஷகாலம் அக்ரேஸராயிருந்து உத்ஸவத்தைத் திறம்பட நடத்தினர். 1924-ம் வருஷத்தில் பரமபதமடைந்தார். T. P. கல்யாண ராம சாஸ்திரிகள் B.A.,B L. இவருடைய குமாரராவர்.

தஞ்சாவூர் பஞ்சாபகேச பாகவதர்

எனது தந்தையாராகிய இவர் தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதரவர்களின் முக்கிய சிஷ்யர். இவருடைய தகப்பனராகிய தஞ்சை ஆஸ்தான வித்துவான் திருப்பூந்துருத்தி அப்பாத்துரை அய்யரிடம்தான் கிருஷ்ண பாகவதரவர்கள் பரத நாட்டியக் கலையைப் பயின்ருர். பஞ்சாபகேச பாகவதருக்கு 16 வயது பூர்த்தியாவதற்கு முன்பே கிருஷ்ண பாகவதரவர்களின் ஸெட்டில்சேர்த்துக்கொள்ளப்பட்டு வெகு சீக்கிரத்தில் தயாரிக்கப்பட்டார். இயற்கையிலேயே நல்ல சாரீரமும் சுருதி, லய, ஸ்வரஞானமுமுள்ள இவர் பாகவதரவர்களின் பிரதான சிஷ்யர் என்ற ஸ்தானத்தைத் திறம்பட வகித்து சுமார் 18 வருஷகாலம் (அதாவது குருவின் கடைசி காலம் வரை) அவரைவிட்டுப் பிரியாது இருந்தார்.

பஞ்சாபகேச பாகவதர் சிஷ்யராய் அமர்ந்த காலத்திலேயே நன்ருய்ப் பிடில் வாசிப்பார். அதன் பிறகு தன்னுடைய இடைவிடா உழைப்பினுலும் நல்ல கேள்விகளினுலும் இவருடைய வாசிப்பு உயர்தரமாய் விளங்கியபடியால் சில சமயங்களில் மஹாவைத்யநாத சிவன் அவர்கள் கச்சேரிகளிலும் பல முறை பட்டணம் சுப்ரமணிய அய்யர் அவர்கள், வேணுகானம் சரப சாஸ்திரிகள் ஆகிய வித்துவான்களின் கச்சேரிகளிலும் வாசித்து நல்ல கியாதியை யடைந்தார்.

ஒரே பாடமுள்ள அநேக கீர்த்தனைகளையும் உருப்படிகளையும் கிருஷ்ண பாகவதரவர்கள் சுரகெத்திலும் பஞ்சாபகேச பாகவதரவர்கள் பிடிலிலும் சேர்ந்து வாசிக்கையில் அவைகளைக் கேட்போர் தாங்கள் ஏதோ கந்தர்வலோகத்தில் சஞ்சாரம் செய்வதாகவே எண்ணுவார்கள். மைசூர், ராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய சமஸ்தானங்களில் இம்மாதிரி அநேக கச்சேரிகளைச் செய்து, இவர்கள் இருவரும் பெரிதும் சம்மானிக்கப் பட்டிருக்கிருர்கள். கிருஷ்ண பாகவதரவர்கள் தனது கடைசி காலத்தில் பஞ்சாபகேச பாகவதரைக் கதை செய்யச் சொல்லி உத்ஸாகப்படுத்தித் தானும் நேரில் இருந்து கேட்டானந்தித்து ஆசிர்வதித்தார்- 1903-ம் வருஷத்தில் தன் குரு காலமானவுடன் அவர் ஒப்புக்கொண்டிருந்த அநேக கதைகளைப பஞ்சாபகேச பாகவதரே செய்து ரஸிகர்களால் மிகவும் அபிமானிக்கப்பட்டார். அது முதல் தொடர்ச்சியாய் அநேக கதைகள் செய்தார். கிருஷ்ண பாகவதரவர்களின் கதையில் இவர் நிர்வகித்துப் பாடியதுபோல் இவருடைய கதையில் நிர்வகித்துப் பாடக்கூடிய தகுந்த பாடகர்கள் இவருக்குக் கிடைக்கவில்லை.

அந்த வருஷம் திருவிசை நல்லூர் ஸ்ரீ ஐயர்வாள் உத்ஸவத்தில் அமாவாசையன்று ஒரு ரஸமான பரபரப்பு ஏற்பட்டது. அதாவது அது வரை அமாவாசையன்று தவருமல் வெகு வருஷங்களாய்க் கதைசெய்து கொண்டுவந்த தஞ்சாவூர் கிருஷ்ண பாகதரவர்கள் காலமாகிவிட்டபடியால் அந்த ஸ்தானத்தில் அன்னரின் சிஷ்யராகிய தஞ்சாவூர் பஞ்சாபகேச பாகவதர் தான் கதை செய்யவேண்டும் என்று ஒரு கட்சியாரும் இதுவரை 4-5 வருஷங்களாய் சதுர்த்தசியில் கதை செய்துவந்த திருப்பழனம் பஞ்சாபகேச சாஸ்திரியார்தான் அன்று கதை செய்யவேண்டும் என்று ஒரு கட்சியாரும் வாதாடினர்கள். இரண்டு கட்சிகளும் ஒன்றுக்கொன்று விட்டுக் கொடுப்பதாயில்லை. இந்த நிலைமையில் அங்கு வந்த மிருதங்கம் நாராயணஸாமி

அப்பா அவர்கள் தஞ்சாவூர் பஞ்சாபகேச பாகவதரவர்கள்தான் அன்று கதை செய்ய உரிமையுள்ளவர் என்றும் அன்னருக்கு வாசிப்பதற்காகவே தான் அங்கு வந்திருப்பதாயும் சொன்னபடியால் அன்று இவரே கதை செய்தார்.

கதைக்கு வந்திருந்த மகா மகோபாத்யாய ராம ஸுப்பா சாஸ்திரிகள் என்ற பெரியார் பஞ்சாபகேச பாகவதரின் கதையை மிகவும் ரஸித்துக் கொண்டாடினர். கிருஷ்ண பாகவதரவர்கள் காலமானதாகவே தனக்குத் தோன்றவில்லையென்றும் கண்களை மூடிக்கொண்டு இந்தக் கதையைக் கேட்கும்போது கிருஷ்ண பாகவதரவர்களையே தான் காண்பதாயும் கண்களைத் திறந்தால் தான் பஞ்சாபகேச பாகவதரவர்களைக் காண முடிகிறது என்றும் புகழ்ந்தார்.

அடுத்த சில மாதங்களில் இவருக்கு ஜ்வரத்தால் உடல் நலம் குன்றி, இனி பிழைக்கமாட்டார் என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆனல் தெய்வக் கிருபையினல் நாளடைவில் உடம்பு தேறி மறுபடியும் இவர் கதை செய்ய ஆரம்பிக்க 3, 4 வருஷங்களாயின. இந்த இடைக்காலத்தில் கிருஷ்ண பாகவதரவர்களின் பத்ததியைக் கேட்க இயலாத ஜனங்கள் மற்ற பாகவதர்களையும் ஆதரித்தபடியால் அவரவர்கள் தங்கள் தங்கள் வழியில் பிரபலமடைந்து வந்தார்கள். ஆனல் கடைசிவரையில் தனது குருநாதனுகிய கிருஷ்ண பாகவதரவர்களின் வழியையே பின்பற்றி அதைக் காப்பாற்றிய தனிச் சிறப்பு இவரையன்றி மற்றவர்களுக்கில்லை.

இவருடைய ஸெட்டில் ஆதியில் பழநி கடவாத்யம் கிருஷ்ணையரும், காரைக்குடி பெரிய அய்யா என்பவரும் பாடினர்கள். பிறகு மாதிரி மங்கலம் நடேசய்யரையும், உடுமல்பேட்டை சுப்ரமண்ய அய்யர் என்பவரையும் தயாரித்தார். 1910-ம் வருஷத்தில் கடவாத்யம் கிருஷ்ணையரவர்கள் காலஞ் சென்றபடியாலும் நடேசய்யர் நிரந்தரமாயில்லாததாலும் சூலமங்கலம் சேஷ பாகவதரைத் தயார் செய்தார். அவர் கடைசி வரையில் பாடினர். இரண்டாம் பாட்டாக பாடியவர்களில், டி. பி. கிருஷ்ண பாகவதர், லால்குடி ராமஸ்வாமி பாகவதர், கும்பகோணம் குஞ்சு பாகவதர், தஞ்சை பாவணி சாஹேப், கிஷ்ணமாசாரியார் (டைகர் வரதாசாரியார் சகோதரர்) பாலக்காடு ராம பாகவதர், பாலக்காடு அனந்தக்கிருஷ்ண பாகவதர், திருவிசைநல்லூர் ராமஸாமி பாகவதர் (சித்திரக்காரர் "மாலி"யின் தந்தை) ஆகியோரைக் குறிப்பிடலாம். மிருதங்கம் வாசித்தவர்களில், ஆதியில் மிருதங்கம் நாராயணஸாமி அப்பா அவர்களின் சிஷ்யரான பாலக்காடு சுப்ரமண்யம் சிலகாலம் வாசித்தது குறிப்பிடத்தக்கது. அவர் பாலியத்திலேயே காலமாகிவிட்டபடியால் மைலாட்டூர் கிருஷ்ணையரின் தமயனர் குமாரரும் சிஷ்யருமாகிய மைலாட்டூர் ஸாமி அய்யர் என்பவர் ஸெட்டில் சேர்ந்து நிறம்பட வாசித்து கடைசி காலம் வரை அதாவது 13 வருஷ காலங்கள் ஸெட்டுடன் இருந்தது குறிப்பிடத்தக்கது.

பஞ்சாபகேச பாகவதரவர்கள் இந்தக் காலங்களில் ராமனுதபுரம் ஸ்ரீனிவாஸய்யங்கார், பாலக்காடு அனந்தராம பாகவதர், கோனேரிராஜபுரம் வைத்யநாதய்யர், பல்லடம் சஞ்சீவிராவ், மதுரை புஷ்பவனமய்யர் போன்ற வித்வான்களின் அநேக கச்சேரிகளுக்குப் பிடில் வாசித்தார். இவரின் கடைசி காலத்தில் இளம் வித்துவான்களாய்க் கச்சேரி செய்ய முன்வந்த மகராஜபுரம் விசுவநாதய்யரையும் அரியக்குடி ராமாநுஜய்யங்காரையும் உத்ஸாகப்படுத்தி, அவர்களின் கச்சேரிகளில் வாசித்து ஆசீர்வதித்திருக்கிறர்.

இவருடைய ஸங்கீதத்தின் நிகரற்ற பாணியிலும், சுருதி, லயம் ஸ்வரம் காலப்பிரமாணம் இவைகளில் உள்ள ஒப்பற்ற ஞானத்தையும், உயர்ந்த சீலத்தையும் உணர்ந்த எல்லா வித்துவான்களும் இவரிடம் மட்டற்ற பக்தியையும் மரியாதையையும் கொண்டிருந்தார்கள். அதுமுதல் மகாமேதாவிகளான வித்துவான்களுடன் பழகும் பாக்கியம் இவருக்கிருந்தபடியால் பிற்காலத்தில் எந்த வித்துவானையும் இவர் அதிகம் லக்ஷியம் செய்வதில்லை. தொழில் முதலான எந்த விஷயங்களிலும் மனச்சாட்சிக்கு விரோதமின்றித் திருப்தியுடன் வாழ்ந்துவந்தார்.

1912-ம் வருஷம் முதல் கடைசி காலம் வரை திருவையாறில் நடந்த சின்னக் கட்சியாரின் ஸ்ரீ த்யாகப்ரம்ஹ உத்ஸவத்தில் பெரிதும் ஈடுபட்டு பக்தி சிரத்தையுடன் நடத்திவந்தார். தஞ்சையில் எம். ஆபிரகாம் பண்டிதரவர்களால் நடத்தப்பட்ட ஸங்கீத வித்யா மஹாஜன சங்கத்தின் வரவேற்புத் தலைவராய் இருந்து அநேக ஸங்கீத மகாநாடுகளில் ஈடுபட்டதுடன் சுருதி விஷயமான சர்ச்சைகளும் செய்தார். பரோடாவில் நடந்த அகில இந்திய ஸங்கீத மகாநாட்டில் புகழடைந்த ஆபிரகாம் பண்டிதரவர்களின் குமாரத்திகள் இருவரும் பஞ்சாபகேச பாகவதரிடம் ஸங்கீதம் பயின்றவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. காலக்ஷேபத் துறையில் நிகரற்ற கியாதியை வாங்கிய ஸ்ரீமதி ஸி. ஸரஸ்வதிபாய் அவர்களும் ஆதியில் சில நிருபணங்களை இவரிடம் அப்யஸித்துக்கொண்டார்.

சில மாதங்கள் நோய்வாய்ப்பட்டு 1920-ம் வருஷம் பிப்ரவரி மீ முதல் தேதியன்று இறைவன் திருவடியடைந்தார்.

மாங்குடி சிதம்பர பாகவதர்

இவர் தஞ்சாவூர் உயர்தர கலாசாலையில் வாசித்து 1899-ம் ஆண்டில் **F. A.** பரீக்ஷையில் தேறி உத்தியோகத்திற்குப் போகயிருந்தார். ஆனால் அவர் தஞ்சையில் வாசிக்கும்போதே கிருஷ்ண பாகவதரவர்களின் கதைகளை அடிக்கடி கேட்டுத் தானும் அம்மாதிரியே வேடிக்கையாய்க் கதை செய்வதுண்டு. கிருஷ்ண பாகவதரவர்களின் நிருபணக் கோவைகளை விட்டுப் போகாமல் எழுதவேண்டும் என்பதற்காகவே 4, 5 சிநேகிதர்களுடன் கதைகளுக்குப் போய் ஒருவர் மாற்றி ஒருவராய் குறித்துக்கொண்டுவந்து பாடம் செய்துவந்தார். இப்படி வேடிக்கையாய் ஆரம்பித்த விஷயம் வினையளவிலும் கைகூடிற்று. பூர்வ வாஸனை பலத்தினாலும் பூவனூர் பிரதாப ராமஸ்வாமி பாகவதர் தஞ்சையில் ஸம்ஸ்க்ருத பண்டிதராயிருந்த மாங்குடி சப்தரிஷி சாஸ்திரிகள் ஆகியோரின் பேராதரவிலும் ஆறே மாதங்களில் பாகவதராகக் காலக்ஷேபஞ் செய்ய ஆரம்பித்தார். இவருடைய அடுத்த சகோதரர் மகாலிங்கய்யர் இவருக்குப்பின்பாட்டாக நிர்வகித்துப் பாடினார். ஆதியில் தாஸ் ஸ்வாமிகள், ஸேதுராமராவ் மைலாட்டூர் கிருஷ்ணையர் ஆகியோர் மிருதங்கம் வாசித்தார். பிறகு மிருதங்கம் தட்சிணாமூர்த்திப் பிள்ளை இவர் ஸெட்டுடன் கொஞ்சநாள் வாசித்தார். மைலாட்டூர் முத்து பாகவதரும் சிலகாலம் வாசித்தார். இந்தக்காலங்களில் பாகவதரின் கடைசி தம்பி சேஷய்யர் தயார் செய்யப்பட்டு சிலவருஷங்களில் இவர் ஸெட்டுடன் வாசிக்க ஆரம்பித்துவிட்டார். ஒற்றுமையான ஸெட்டின் பலத்தினால் சோர்வன்னியில் கதைகளைச் செய்துவந்தார். பெயரும் புகழும் விருத்தியடைந்தன. 1921-ம் வருஷத்தில் எதிர்பாராத நிலைமையில் இவருடைய தம்பிகள் ஒருவர்பின் ஒருவராய்க் காலமானார்கள். என்றாலும் எதிலும் பின்வாங்காத பாகவதரவர்கள் சிலகாலம் சூலமங்கலம் சேஷபாகவதரைப் பின்பாட்டாக வைத்துக்கொண்டு தம்பியின் குமாரர்களான சாமி அய்யர் திருமலை பாகவதரையும், திருப்பூந்துருத்தி விசுவநாத பாகவதரையும் தயாரித்துக் கதைகளைக் கடைசிவரை நிர்

வகித்தது குறிப்பிடத்தக்கது. இந்தக்காலங்களில் நடுக்காவேரி குப்புசாமி அய்யரும் மைலாட்டூர் செல்லப்பய்யரும் மிருதங்கம் வாசித்தார்கள்.

சிதம்பர பாகவதரவர்களின் கதைகள் கிருஷ்ண பாகவதரவர்களின் கதைகளை அஸ்திவாரமாகவும், பஞ்சாபகேச சாஸ்திரியாரின் ஸம்ஸ்க்ருத பத்ததியையும், பண்டிட் லக்ஷ்மணாசார் அவர்களின் அவதாரிகையுடன் கூடிய உபந்யாஸ பத்ததியையும், மேல் கட்டிடமாகவும் கொண்டவை. வால்மீகி சுலோகங்களுடன் அதற்கிணையான கம்பராமாயணச் செய்யுள்களையும் சொல்லி விஸ்தாரமாக உபந்யஸிப்பார். ஆங்கில பாஷையில் தனக்கிருந்த வன்மையினால் காலரீதிக்கேற்றபடி மதம், கலாசாரம், ராஜீயம், பொருளாதாரம் ஆகிய துறைகளில்உள்ள சிக்கலான விஷயங்களைக் கதைகளில் தைரியமாய் அலசி எடுத்துப் பேசி தன்னுடைய பக்ஷபாதமற்ற அபிப்பிராயங்களை அவ்வப்போது சொல்லிவந்தபடியால் கலாசாலை மாணவர்கள் முதல் ஹைகோர்ட்டு ஜட்ஜுகள் வரை உள்ள எல்லோரும் இவர் கதையைப் பெரிதும் ரஸித்தார்கள். தேச முன்னேற்றத்திற்கு இம்மாதிரியான பிரசாரங்கள் அவசியம் என்பதை எல்லோரும் உணர்ந்தார்கள்.

ராமாயணக் கதையை சுமார் 24 தடவைகள் செய்து பட்டாபிஷேக காலங்களில் மஹாஜனங்களின் பேராதரவையும் ஸம்மானங்களையும் பெற்றிருக்கிறார். பாகவதக் கதைகளையும் தொடர்ச்சியாக நடத்தியிருக்கிறார். சிவபரமான அநேக நாயன் மார்களின் சரித்திரங்களை பக்திரஸம் பெருகக் கதை செய்வார். இவருடைய கதைகளில் பெரிதும் ஈடுபட்ட சென்னை மகாஜனங்கள் "மஹாகதக கண்டீரவ" என்ற பட்டத்தை வழங்கினார்கள். ராமநாதபுரம் ஸமஸ்தானத்தில் 'அபிநவ பரதாசார்ய' என்ற பட்டத்தையும் சூட்டினார்கள். கதைகளின் 'ரேட்'டை வரவர உயர்த்திக் கொண்டே வந்து கடைசியாய் ராமநாதபுரம் ஸமஸ்தானத்தில் 1001ரூ ஸம்பாவனையையும், உயர்ந்த சாதராவை ஸ்மமானமாகவும் பெற்றார்.சிலகாலம்வரை அபிப்ராய பேதங்களினால் இவரை லக்ஷியம் செய்யாமலிருந்து வந்த சென்னை ஸங்கீதவித்வத் ஸபையார் 1937-ம் ஆண்டில் இவருக்கு அக்ராஸனர் பதவியை யளித்து ஸங்கீதகலாநிதிஎன்ற பட்டத்தையும் வழங்கித் தங்களை கௌரவித்துக் கொண்டார்கள்.

தியாகப்ரம்ஹத்தினிடம் பாகவதரவர்களுக்கு மட்டற்ற பக்தி உண்டு. ராமாயணக்கதைகளில் அநேக அபூர்வகீர்த்தனைகளை சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு இணைத்துப் பாடி ஸபையோரை மகிழ்விப்பார். திருவாதியில் ஸ்ரீ த்யாகப்ரம்ஹ உத்ஸவத்தை நடத்தி வந்த சின்னக் கட்சியில் இவர் பெரிதும் ஈடுபட்டு பதினாயிரக்கணக்கான ஜனங்களை ஒலிபெருக்கிகளின் உதவியே யில்லாமல் பரவசப்படுத்திக் கதைகள் செய்து வந்ததை எவரும் மறக்கமுடியாது.

சில நாட்கள் நோய்வாய்ப் பட்டு 1938-ம் ஆண்டில் சிவஸாயுஜ்யத்தை யடைந்தார்.

ஹரிகேசநல்லூர் முத்தையா பாகவதர்

இவர் திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்தவர். இவர் மாமன் பண்டிட் லக்ஷமணசூரி என்பவர் பிரக்யாதி பெற்ற ஸம்ஸ்கருத வித்துவான். தஞ்சை உயர்தர கலாசாலையில் பண்டிதராயிருந்தார். தன் மாமன் ஆதரவில் முத்தையா பாகவதரவர்கள் பாலியத்திலேயே தஞ்சைக்கு வந்து, ஸங்கீத வித்துவான் திருவாதி ஸபேசய்யர் அவர்களிடம் ஸங்கீதம் பயின்றார். கச்சேரிகளை நிர்வகிக்கும் சாரீரவசதி அந்தக் காலரீதிப்படி இவருக்குக் குறைவாக இருந்தபடியால் காலக்ஷேபம் செய்ய முன் வந்தார். கிருஷ்ண பாகவதரவர்களின் பத்ததியில் இவருக்கு விசேஷமான பிரேமையிருந்த போதிலும், அவருடைய நிரூபணக் கோவைகள் இவருக்குத் துர்லபமாயிருந்தன.

என்றாலும் தன்னுடைய இடைவிடா முயற்சியினாலும் ஸங்கீதத்தில் தனக்குள்ள யோக்கியதையினாலும் தனக்கென ஒருவழியைச் சிருஷ்டித்துக் கொண்டார்.

தமிழ், தெலுங்கு, மாகராஷ்டிரம் இவைகளில் உள்ள ஸாஹித்யங்களுக்கு நூதனமான வர்ணமெட்டுக்களையமைத்து அதுவரை மற்ற பாகவதர்களால் அதிகம் பிரசாரம் செய்யப்படாத கதைகளைக் கவர்ச்சியுடன் விளங்க அமைத்துக் கொண்டார். இவைகளில் "வள்ளி கல்யாணம்" என்ற சரித்திரம் நல்ல மெருகுடனும் நூதன சோபையுடனும் விளங்கிற்று. இதேபோல் "கௌஸல்யா விவாகம்" "ஸகுந்தோபக்கியானம்" "சுலோசனசதி" "லவகுச" ஆகிய கதைகளையும் இங்குக் குறிப்பிடலாம் இவருடைய ஸங்கீதம் நல்லமெருகமைந்தது. கர்நாடகம் இந்துஸ்தானி ஆகிய உருப்படிகள் கலப்பின்றிச் சுத்தமாய் அந்தந்த எழில்களுடன் விளங்கின தியாகராஜ கீர்த்தனைகளை நிரவல்கள் ஸ்வரங்களுடன் பாடுவார். நுட்பமான சுருதி, ஸ்வர, லய ஞானமுள்ளவராகையால் எல்லா உருப்படிகளும் சோபையுடன் விளங்கின. இவருடைய பிரவசனம் உயர்ந்த நடையில் அமைந்தது. அடுக்குச் சொற்கள் ப்ராஸ வசனங்கள் இருச்சொல் அலங்காரங்களுடன் விளங்கும்.

கோட்டு வாத்தியத்தை வெகு இனிமையாய் வாசிப்பார். இவர் நல்ல மனஸ்வியாயும், ஸௌகியாயு மிருந்தபடியால் வாழ்க்கையில் ஒரு பிரபுவாகவே வாழ்ந்து வந்தார். செட்டி நாடுகளிலும் மற்ற பிரதான நகரங்களிலும் இவருடைய கதைகள் ஏராளமாய் நடந்தன. ஆண்டிப்பட்டி ஜமீந்தார் ஸ்ரீமான் பெத்தாச்சி செட்டியாரவர்கள் கரூரில் நடத்திய உத்ஸவத்தில் முத்தையா பாகதரவர்கள் அக்ரோஸராயிருந்து எல்லா வித்துவான்களையும் வரவழைத்து கௌரவித்து உத்ஸவத்தைத் திறம்பட நடத்தியது குறிப்பிடத்தக்கது.

ஹரிகேச நல்லூரில் சில வருஷங்கள் "ஸ்கந்த ஷஷ்டி" உத்ஸவத்தை வெகு சிறப்பாய் நடத்தி கணக்கற்ற வித்துவான்களைத் தருவித்து அவர்களுக்கெல்லாம் ராஜோபசாரம் செய்து அன்புடன் ஆதரித்து அனுப்புவார். இவரிடம் ஈடுபடாத வித்துவான்களும் வசியமாகாத பிரபுக்களும் இல்லவே இல்லை.

ஸங்கீதத்தில் இவருக்கிருந்த அபாரமான யோக்யதையையும் கவன சக்தியையும் அறிந்த மைசூர் மகாராஜா இவரை ஆஸ்தான வித்துவானாய் நியமித்து சாமுண்டேச்வரின் பேரில் 108 கீர்த்தனைகளை இயற்றும்படி விரும்பினர். அந்தப்படியே முத்தையாபாகவதரவர்கள் இயற்றிய கீர்த்தனைகள் வெகு அழகாய் அமைந்திருப்பதைக் கேட்டு யதேஷ்டமான ஸம்மானங்களைச் செய்து "காயகசிகாமணி" என்ற பட்டத்தையும் வழங்கினர். திருவாங்கூர் ஸமஸ்தானத்தில் ஸ்ரீஸ்வாதித்திருநாள் மகாராஜா அவர்களால் இயற்றப்பட்ட சுமார் 400 கீர்த்தனைகளைச் சேகரித்து வர்ண மெட்டுக்களை யமைத்துப் பிரஸித்திக்குக் கொண்டு வந்தார். ஸ்ரீஸ்வாதி திருநாள் ஸங்கீதக் கலாசாலையின் தலைவராயுமிருந்து அநேக பிரபல வித்துவான்களை திருவாங்கூர் ஆஸ்தானத்தில் அமர்த்தினர், சென்னை ஸங்கீத வித்வத் ஸபையில் அக்ராஸனம் வகித்து "ஸங்கீத கலா நிதி" என்ற பட்டத்தையும் பெற்றார். ஸர்வகலாசாலையார் 'டாக்டர்' என்ற பட்டத்தையும் இவருக்கு அளித்தார்கள்.

திருவாதியில் ஸ்ரீத்யாகப்ரம்ஹத்தின் உத்ஸவத்தை நடத்தி வந்த இரண்டு கட்சிகளையும் ஒன்றுபடுத்த முத்தையாபாகவதர் 1914-ம் ஆல் வெகு பாடுபட்டார். அது நிறைவேறாமல் போகவே சில வருஷங்கள் மதுரையில் ஸ்ரீத்யாகப்ரம்ஹ உத்ஸவத்தை வெகு சிறப்பாய் நடத்தினர். இந்தக் காலத்தில் தான் ஸ்ரீ த்யாகப்ரம்ஹத்தின் சரித்திரத்தைக் காலக்ஷேப ரூபமாய்

அமைத்து வெகு அருமையாய்ச் செய்தார். கடைசியாய் 1940-ம் வருஷம் திருவாதியில் எல்லாக் கட்சிகளும் ஒன்றுபட்ட வைபவத்தைக் கண்டு களித்தார். 1945-ம் வருஷம் பரமபத மடைந்தார்.

பாலக்காடு அனந்தராம பாகவதர்

இவர் ஆதியில் பண்டிட் லக்ஷ்மணசார் அவர்களுக்கு உதவிப்பாடகராய்ச் சிலகாலம் இருந்தார். இவருடைய ஸங்கீதத்திலும் சாரீரத்திலும் பெரிதும் ஈடுபட்டிருந்த ஆசார் அவர்களுக்கு அனந்தராம பாகவதரவர்களுடைய உதவி அத்யாவசியமாயிருந்தபடியால் இவரைப், பின்னால் நிறுத்தாமல் தன் பக்கத்திலேயே நிறுத்திவைத்துக்கொண்டது குறிப்பிடத்தக்கது. ஸங்கீத பாகங்கள் பூராவையும் அனந்தராம பாகவதரவர்களிடம் ஒப்புவித்து பிரவசன பாகங்களை மட்டும் தான் மேறகொண்டார்.

சில வருஷங்களுக்கெல்லாம். அனந்தராம பாகவதரவர்கள் கச்சேரி செய்ய ஆரம்பித்து அதில் வெகுசீக்கிரம் முன்னணிக்கு வந்து நல்ல கீர்த்தியும் பெற்றார். இந்த சமயம் இவர் காலக்ஷேபத்துறையை மறந்திருந்தபோதிலும், பூர்வ வாஸனை பலத்தினாலும் அநேக நண்பர்களின் முயற்சியினாலும் காலக்ஷேபஞ் செய்ய முன்வந்தார். இவருடைய கதைகளில் ஸங்கீதத்திற்கு அளவுக்கு மிஞ்சிய பிரதான்யம் கொடுத்து சாதாரண உருப்புகளைக் கூட கச்சேரி முறையில் நிரவல்கள் செய்து ஸ்வரங்களுடன் பாட ஆரம்பித்தபடியால் ப்ரவசன பாகங்கள் மலினமாகிவிட்டன. ஆகையால் காலக்ஷேபத்திற்கு வேண்டிய சோபை ஏற்படவில்லை. என்றாலும் இவருடைய ஸங்கீதத்தில் வெகுவாய் ஈடுபட்டிருந்த வகுப்பார் இவருடைய காலக்ஷேபங்களை கௌரவித்து அபிமானித்து வந்தது குறிப்பிடத்தக்கது. பாலக்காடு ராம பாகவதர் இவருடைய முக்கிய சிஷ்யராய் கதைகளில் பாடிவந்தார். அந்தக்காலத்தில் பிரபலமாயிருந்த எல்லா மிருதங்க வித்துவான்களும் இவருடைய கதைகளுக்கு வாசித்திருக்கிறார்.

இவர் நல்ல வசீகரமுள்ள தோற்றமுள்ளவர். நல்ல ஸாகி. நண்பர்களிடமும் மற்றவர்களிடமும் வெகு ஸரஸமாய்ப் பழகுவார். நல்ல செலவாளி. ஸ்ரீராம நவமி உத்ஸவத்தைச் சில வருஷங்கள் விமரிசையாய் நடத்தியிருக்கிறார். இவருடைய குமாரர் ஸாமி பாகவதர் நன்றாய்ப் பாடுவார். 1918-ல் இவர். காலமானார்.

தஞ்சாவூர் நாகராஜ பாகவதர்

இவர் தஞ்சாவூர் கோவிந்தராஜ பாகவதரின் முக்கிய சிஷ்யர். அவரிடம் சிலகாலம் முக்கிய பின்பாட்டுக்காரராயிருந்து கதைகளில் நன்கு நிர்வகித்துப் பாடிவந்தார். பிறகு இந்த நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் இவர் கதை செய்ய ஆரம்பித்தார். இவருடைய கதைகள் தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதரவர்களின் பத்ததியை அனுசரித்து இருந்தன சுருதிலீனமும் கணிப்புமுள்ள சாரீர பலத்தினால் உருப்படிகளைப் போஷித்துப் பாடுவார். இவருடைய பிரவசனங்கள் படபடப்பாகவும் கதைகள் சுறுசுறுப்பாகவும் இருந்தபடியால் மூன்று மணி அவகாசத்தில் அலுப்புத்தட்டாதபடி முடித்துவிடுவார். கதைகளில் சிருங்காரம், ஹாஸ்யம், பக்தி,வீரம் ஆகிய ரஸங்கள் ததும்பும். நிச்சயமான சுருதி, ஸ்வர, லயஞானம் இவருக்கு உண்டு. பிடில் அழகாக வாசிப்பார். கூடுமானபோது சில கச்சேரிகளிலும் கலந்துகொள்வதுண்டு.

அந்தக் காலத்துப் பிரபல வித்துவான்கள் எல்லோரும் இவரை அபிமானித்துவந்தார்கள். சென்னை ஸபைகளிலும், செட்டிநாடுகளிலும் மற்ற முக்கியமான பட்டணங்களிலும் இவருடைய காலக்ஷேபங்களை மிகவும் ஆத

ரித்தார்கள். ஸ்வபாவத்தில் நல்ல ஸரஸி. வாழ்க்கையில் நல்ல சுகி. தொழில் விஷயத்தில் மிகவும் கண்டிப்புள்ளவர். ஸ்ரீ த்யாகப்ரம்ஹ உத்ஸவப் பெரிய கட்சியில் இவர் வெகு தீவிரமாய் ஈடுபட்டிருந்தார். வீணை தனம்மாள், பிடில் கோவிந்தஸாமிப் பிள்ளை ஆகிய இருவரும் இவருடைய அத்யந்த நண்பர்கள். இவருடைய செட்டில் இருந்தவர்களில் முக்கியமாய் வெங்கட்டராமய்யர், ராதாமணி பாகவதர், தஞ்சாவூர் மிருதங்கம் பக்கிரி, பாப்பு ராவ், விட்டல் ராவ், கிருஷ்ணப் பிள்ளை இவர்களைக் குறிப்பிடலாம். இவருடைய குமாரர் சுப்பிரமணிய பாகவதர் சிலகாலமாய்க் கதை செய்துவருகிறார்.

திருவிடைமருதூர் கிருஷ்ண பாகவதர்

இவரும் இந்த நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலேயே கதை செய்ய ஆரம்பித்தார். அநேக பாஷைகளில் தக்க பாஷாஞானம் உள்ளவர். தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதரவர்களின் பத்ததியை அனுசரித்தே பெரும்பாலும் இவருடைய கதைகள் விளங்கின. நல்ல சுருதி லீனமான சாரீரத்துடன் பத்ததி தவறாமல் உருப்படிகளைப் போஷித்துப் பாடுவார். இவருடைய பிரவசனங்கள் அமரிக்கையாகவும், பக்திரஸம் ததும்பியும் விளங்கின. ஸ்வபாவத்தில் நல்ல சிஷ்யர். எந்த விதமான கட்சிப் பிரதி கட்சிகளிலும் ஈடுபடமாட்டார். இவருடைய கதைகளுக்கு நல்ல ஆதரவு இருந்தது. சமீப காலத்தில் காலமானார்.

சிதம்பரம் ஸ்ரீரங்காச்சாரியார்

இவர் நல்ல சொல்வன்மையும், திவ்யமான சாரீர ஸம்பத்துமுள்ளவர். சிவ வைஷ்ணவபரமான இரண்டு வகைக் கதைகளையும் செவ்வனே கையாள்வார். ஸம்ஸ்கிருதம், தமிழ் இவைகளில் நல்ல பாண்டித்யம் உள்ளவர். நாலாயிரப்ரபந்தங்களிலிருந்து அநேக மேற்கோள்களுடனும் அவதாரிகைகளுடனும் கூடிய உபன்யாஸப் பத்ததியில் இவருடைய கதைகள் அமைந்திருக்கும்.

தன்னுடைய சாரீர வன்மையினாலும் ஸங்கீத ஞானத்தினாலும் கதைகளில் வரும் உருப்படிகளுக்கு நவீனமான வர்ணமெட்டுக்களையமைத்து நன்கு போஷித்துப் பாடினபடியால் இவருடைய கதைகளுக்கு பிரத்யேகமான சோபையும் அமோகமான வரவேற்பும் நல்ல செலாவணியும் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது. கதைகளில் ஸங்கீத பாகங்களும், பிரவசன பாகங்களும் ஒன்றுக்கொன்று ஏற்றத்தாழ்வன்றி இருந்தபடியால் கேட்போருக்குக் கொஞ்சமும் அலுப்புத்தட்டாமல் ஸந்தர்ப்பானுஸாரமாய் விளங்கியபடியால் காலக்ஷேபத்துறையில் நல்ல கியாதியும் வரும்படியும் இவரைத் தேடி வந்தன.

இவர் நல்ல மனஸ்வியும் தன்மதிப்பு முடையவராகையால் தொழில் விஷயத்தில் அனுவசியமான போட்டிக்கும் கட்சி ப்ரதிகட்சிகளுக்கும் இடமளிப்பதேயில்லை. ஆகவே ரஸிகர்களும் மற்ற வித்துவான்களும் இவரிடம் மட்டற்ற மரியாதையை வகித்தார்கள். இவருடைய செட்டில் இருந்தவர்களில் திருவண்ணாமலை சுப்புரத்ன பாகவதர், மஞ்சக்குடி ராமச்சந்திர பாகவதர், P. B. ரங்காச்சாரியார், மிருதங்ககம் லக்ஷ்மணராவ் ஆகியோரைக் குறிப்பிடலாம். இவருடைய குமாரர் விஜய ராகவாச்சாரியார் காலக்ஷேபத்துறையில் ஈடுபட்டு நல்ல கியாதியுடன் விளங்குகிறார். ஸ்ரீ ரங்காசாரியார் ஸமீப காலத்தில் சில வருஷங்களுககு முன் பரமபத மடைந்தார்.

பழநி சுப்பிரமண்ய பாகவதர்

இவர் சிலகாலம் பள்ளிக்கூட உபாத்தியாயராயிருந்து பிறகு காலக்ஷேபத்துறையில் ஈடுபட்டார். இவருடைய பிரவசனங்கள் போதனு முறையில் எளியநடையில் அமைந்திருக்கும் ஸங்கீதத்திலும் இவருக்கு நல்ல பரிச்சய முண்டு. கதைகளில் வரும் எந்தச் சிக்கலான விஷயங்களையும் கேட்போருக்கு நன்கு விளங்க வைக்க வேண்டும் என்ற சிரத்தையுடன் இவர் கதை செய்தபடியால் எல்லோரும் இவருடைய கதைகளை விரும்பினுர்கள். முக்கியமாய் கதைகளின் மூலமாய் பக்திரஸத்தைப் புகட்டி கேட்போர்களின் உள்ளங்கள் பரவச மடையும்படி கதைசெய்யும் ஆற்றல் இவருக்கு அதிகம். கதைகளைச் சொல்லும் போது சிற்சில சமயங்களில் அந்தந்த ரஸங்களில் அவரும் தன்மயப்பட்டு மூழ்கி விடுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

படாடோபமான வாழ்க்கையைக் கனவிலும் நினையார். இவருடைய உயர்ந்த ஸ்வபாவத்திலும் நேர்மையான வாழ்க்கையிலும் அநேக வித்வான்கள் ஈடுபட்டு இவரைப் பெரிதும் மதித்துவந்தபடியால் இவருடைய கதைகளுக்கு நல்ல செல்வாக்குண்டு. திருவாதி ஸ்ரீ த்யாகப்பிரம்ஹ உத்ஸவ சின்னக் கட்சியில் இவர் ஈடுபட்டிருந்தார். இவருடைய ஸெட்டில் குழுமணி சுப்பிரமண்ய பாகவதர் பாடியும் திருவானைக்காவல் பஞ்சுவைய்யர் மிருதங்கம் வாசித்தும் வந்தார்கள். சில வருஷங்களுக்குமுன் இறைவன் திருவடிகளை யடைந்தார்.

சூலமங்கலம் சௌந்திர ராஜ பாகவதர்

இவருடைய தகப்பனுர் ஸீதாராம பாகவதர் தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதரவர்களின் ஸமகாலத்திலிருந்தவர். தவிர எனது பிதாமகர் தஞ்சை ஆஸ்தான வித்துவான் திருப்பூந்துருத்தி அப்பாதுரை அய்யர் அவர்களிடம் தஞ்சாவூர் கிருஷ்ணபாகவதரவர்களுடன் இவரும் பரதசாஸ்திரத்தை அப்பியஸித்தார். பிறகு கிருஷ்ண பாகவதரவர்களைப் போலவே தானும் கதை செய்ய வேண்டும் என்ற அவா உண்டானபடியால் காலக்ஷேபத் துறையில் ஈடுபட்டார். கிருஷ்ண பாகவதரவர்களின் பத்ததியை அனுசரித்து இவர்கதை செய்ய முன் வந்ததால் கிருஷ்ண பாகவதரவர்களின் காலத்தில் இவருடைய கதைகள் அவ்வளவாக சோபிக்கவில்லையானுலும் பிற்காலத்தில் கொஞ்சம் செலாவணியில் இருந்தன.

தன்னுடைய குமாரராகிய ஸௌந்திர ராஜ பாகவதரை பாலியத்திலேயே தயாரித்து, தன்னுடைய ஸெட்டுடன் இரண்டு மூன்று வருஷங்கள் பாடும்படி செய்தார். பிறகு 1908ம் வருஷத்தில் தன் குமாரரையே கதை செய்ய தயாரித்து ஏற்பாடுசெய்தார். ஸௌந்திரராஜ பாகவதருக்கு அப்போது 18வயதுதான் இருக்கும். வசீகரமான தோற்றமும், நல்ல கணிப்பான சாரீரமும் இருந்தபடியாலும், தன் தகப்பனுரிடம் முறைப்படி பரத நாட்டியத்தில பயிற்சி பெற்றிருந்தபடியாலும் கதைகளின் பத்ததி முழுவதும் கிருஷ்ண பாகவதரவர்களின் வழியை அனுசரித்து இருந்தபடியாலும் ரஸிகர்களின் பேராதரவை வெகு சீக்கிரத்தில் கவர்ந்தார். இவருடைய கணிப்பான ஸ்தாயி சாரீரமும் அமரிக்கையான ப்ரவசனங்களும் அந்தந்த ரஸங்களுக்கும் பாத்திரங்களுக்கும் ஏற்றவாறு பாடிப் பேசி நடித்துக் கதை செய்யும் ஆற்றலும் இவரை வெகுசீக்கிரத்தில் பாகவதரவர்களின் முன்னணியில் கொண்டுவந்தன. இவருடைய ஸெட்டும் நன்ருகவே அமைந்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆகவே இவருடைய கீர்த்தியும், வரும்படியும், சுக்ல பக்ஷத்துச் சந்திரனைப்போல் வெகு சீக்கிரத்தில் வளர்ந்து பூரணத்வம் பெற்றன. காலக்கிரமத்தில் தன்னுடைய இடைவிடா உழைப்பினுல் பாஷாந்திர

ஞானத்தையும் பெற்றார். முதல்முதலில் ராமாயணக் கதைகளைத் தொடர்ச்சியாகத் தயாரித்து தஞ்சாவூர் அரண்மனையில் காலக்ஷேபங்களாய்ச் செய்து வெகுவாய்ச் சம்மானிக்கப்பட்டார். பிறகு மதுரை, காரைக்குடி, சென்னை முதலிய இடங்களிலும் ராமாயண கதையைச் செய்து பிரஸித்தியடைந்தார். கதைகளின் ரேட்டுக்களையும் மளமளவென்று உயர்த்திக்கொண்டே வந்து வெகு சீக்கிரத்தில் 400 ரூ. வரை வாங்கினர். ராம நவமி உத்ஸவத்தைத் தன் வீட்டில் வெகு சிறப்பாய் நடத்தி எல்லா வித்துவான்களின் கச்சேரிகளையும் வைத்தார். வயதில் சிறியவராயிருந்தபோதிலும் எல்லா பிரபலப் வித்துவான்களும் இவரை அபிமானித்து கௌரவித்தனர்.

திருவாதி ஸ்ரீ த்யாகப்ரம்ஹ உத்ஸவ சின்னக் கட்சியில் சில வருஷங்கள் ஈடுபட்டுக் கதை செய்தார். 1924ம் வருஷத்தில் சின்னக்கட்சியின் எல்லாப் பொறுப்புகளையும் தானே முன்னின்று வகித்து ஸ்ரீ த்யாஹப்ரம்ஹ உத்ஸவத்தை நடத்தினர். இப்படியாக நல்ல கியாதியுடன் முன்னணிக்கு வந்த இவருடைய விஷயத்தில் தெய்வ ஸங்கல்பம் வேறு விதமாய் இருந்தபடியால் 1925-வது வருஷத்தில் தன்னுடைய 35-வது வயதில் சில நாட்கள் நோய் வாய்ப்பட்டு இறைவன் திருவடியடைந்தார். இவருடைய ஸெட்டில் இருந்தவர்களில் ஆதியில் கங்காதர தீக்ஷிதரையும், துரைஸாமிப் பத்தரையும், பின்னிட்டு மாதிரிமங்கலம் நடேசய்யர் சாமா பாகவதர், பாவணி ஸாஹேப், காளையார் கோவில் வெங்கட்டராமய்யர், சூலமங்கலம் சேஷ பாகவதர் ஆகியோரையும் மிருதங்கம் வாசித்தவர்களில் தஞ்சாவூர் சுந்தர ராவ், விட்டல் ராவ், மகாலிங்கம் பிள்ளை, முத்து பாகவதர், மணி பாகவதர் ஆகியோரையும் குறிப்பிடலாம்.

ஸ்ரீமதி ஸி. ஸரஸ்வதிபாய்

இவர் ப்ரஹ்ம குலத்தில் உதித்த ஓர் பெண்மணி. ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர். கன்னட பாஷையைத் தாய் பாஷையாகக் கொண்டவர். பாலியத்திலேயே இவருக்கு நல்ல முகவெட்டும் இனிமையான சாரீரமும், சுருதிலய ஞானமும் கூர்மையான புத்தியும் நல்ல சொல்வன்மையும் இருந்தபடியால், கிருஷ்ண பாகவதரவர்களின் பத்திப்படி 1909-ம் ஆண்டில் இவர் கதை செய்ய ஆரம்பித்தபோது காலக்ஷேபத்துறையில் ஒரு பெரிய புரட்சியே உண்டாயிற்று என்பது மிகையாகாது. காலக்ஷேபங்களுக்கு நல்ல ஆதரவும் அநேக பாகவதர்கள் பிரஸித்தமாகவும் விளங்கிவந்த அந்தக் காலத்தில் ஓர் பெண்மணி கதை செய்ய முடியும் என்று ஸ்வப்பனத்தில்கூட எவரும் எண்ணவில்லை யாகையால் காலக்ஷேபத்துறையில் ஒரு சூறுவளிக் காற்றே கிளம்பியதாய் எண்ணினர்கள்.

ஆதியில் தஞ்சாவூர் பஞ்சாபகேச பாகவதரவர்களிடம் சில நிருபணங்களையும் வேண்டிய பிரவசனங்களையும் முறைப்படி பயின்று வெகு தைரியமாய்க் கதை செய்ய முன்வந்தபடியால் மகாஜனங்களும் ரஸிகர்களும் இவருடைய காலக்ஷேபங்களை அமோகமாய் வரவேற்றனர். இவருடைய கியாதி சென்னை மாகாணம் மட்டுமின்றி இதர மாகாணங்களிலும் பரவிற்று. இவருடைய ஹிந்துஸ்தானி ஸங்கீதபாணியும், கர்னடக ஸங்கீதபாணியும் அந்தந்த எழிலுடன் பரிசுத்தமாய் இருந்தபடியால் எல்லா ஸங்கீத வித்துவான்களும் ரஸிகர்களும், மகாஜனங்களும் இவருடைய சங்கீதத்தில் மயங்கினர்கள். ஸங்கீதமும் பிரத்யேகக் கவர்ச்சியுடன் விளங்கினபடியால் "காயனபடு" "கீர்த்தனபடு" என்ற பட்டங்களை மஹாஜனங்கள் இவருக்கு வழங்கி, பெரிதும் கௌரவித்தார்கள். அளவற்ற சமமானங்களையும் வழங்கினர்கள்.

செட்டி நாடுகளிலும் மற்ற முக்கியமான பட்டணங்களிலும் ஏராளமான கதைகளைச்செய்து உயர்ந்த ரேட்டுக்களையும் தோடா மெடல்கள்

போன்ற கணக்கற்ற பரிசுகளையும் பெற்றார். இவருடைய காலக்ஷேபங்களின் முக்கியமான அம்சம் என்னவென்றால் இவருடைய உயர்ந்த ஸங்கீதத்தில் பெண்மையும் பிரவசன பாகங்களில் ஆண்மையும் விளங்கியபடியால் கதைகள் பண்டித பாமர ரஞ்சகமாயிருந்தன.

ஆரம்பத்திலிருந்து இவரைக் காலக்ஷேபத்துறையில் தயார் செய்து ஊக்கமளிக்கும் விஷயத்திலும் தொழில் நடத்தும் விஷயங்களிலும் பூரணமான பொறுப்பை ஏற்று இவருக்குக் குருவாகவும், தந்தையின் ஸ்தானத்திலும் விளங்கிவரும் பண்டிட் T. B. கிருஷ்ணசார் என்ற ரஸிக சிகாமணியை ஸங்கீத உலகம் பூராவும் அறியும். தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதரவர்களிடத்திலும் அவருடைய பத்ததியிலும் பெரிதும் ஈடுபட்டு பாலியம் முதல் அவருடைய கதைகளை இடைவிடாமல் கேட்டு அதில் மூழ்கித் திளைத்திருந்த T. B. கிருஷ்ணசார் அவர்களின் சிருஷ்டியில் தயாரான ஸ்ரீமதி C ஸரஸ்வதி பாய் அவர்கள் காலக்ஷேபத்துறையில் ஒரு சூறாவளியை யுண்டாக்கியது ஆச்சரியமேயில்லை. ஆனால் அவருக்கிருந்த செலாவணியைப்போல் தங்களுக்கும் ஏற்படலாம் என்று நம்பி கதை செய்ய முன்வந்த அநேகப் பெண்மணிகள் கிளிப்பிள்ளைகளைப்போல் சொன்னதையேச் சொல்லி வந்தபடியால் காலக்கிரமத்தில் காலக்ஷேபத்துறையிலிருந்து மறைய நேரிட்டது.

தற்காலம் வயதுக்கிரமத்தினால் ஸ்ரீமதி C. ஸரஸ்வதிபாய் அவர்கள் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த போதிலும் இவருடைய காலக்ஷேபங்களை ரஸிகர்கள் என்றும் மறக்கமாட்டார்கள் என்பது திண்ணம்.

சங்கீத வாத்தியங்களுக்குப் பெயர் பெற்றது

தஞ்சாவூர்

★

சாஸ்திர முறைப்படி உத்திரவாதத்துடன் வீணைகள், தம்பூராக்கள், கோட்டு வாத்தியம், மிருதங்கம், கஞ்சீரா, புல்லாங்குழல் முதலியவைகள் கைதேர்ந்த ஆட்களைக் கொண்டு தயாரித்து வருகிறோம், பிடில்களும், தந்திகளும் சில்லரையாகவும், மொத்தமாகவும் எங்களிடம் கிடைக்கும். விபரங்களுக்கு எழுதவும்.

THE SOUTH INDIA MUSICAL STORES,

2298, KRISHNA RAO LANE

TANJORE (S.I.)

Edited & Published by **RANJAN** B. A., M. Litt. Cathedral Post, Madras—6.

Printed by D. K. Swomy at the Rajan Electric Press, 7, Sunkurama Chetty Street, G. T. Madras—1.